THE MADURA TAMIL SANGAM

# பிள்ளை உறங்கா வில்லியார் சரிதம்

முகமுதலியார் M.A., B.T., M.O.L.
அன்பளிப்பு
சென்னை-20.

# பிள்ளை உறங்கா வில்லியார் சரிதம்

THE MADURA TAMIL SANGAM

பிரசங்க இரத்தினாகரம்

## தி. சு. கண்ணபிரான் பிள்ளையவர்கள்

இயற்றியது

பிரசுர கர்த்தர் :

**M. R. அப்பாதுரைப் பிள்ளையவர்கள்**

புத்தக வர்த்தகர்

**57, ஆண்டர்ஸன் தெரு**

:: சென்னை ::

உரிமைப்பதிவு] 1938 [விலை அணா 6

# FOREWORD

BY

## DIWAN BAHADUR

## P. M. SIVANGNANA MUDALIAR AVL., B.A., B.L.,

In ancient days Tamil Poets were maintained by the then Kings so that the Poets were free from the anxieties of family life and devoted all their time and talents and their intuitive faculties so as to produce the gems of Tamil Literature. But as years passed on and the Kings were dethroned and a new order of things prevailed there was no scope nor encouragement for such intellects which gradually dwindled almost into oblivion except perhaps for some ill-composed verses to cater to the low tastes of the present day.

In these days when fears are being entertained that the Tamil Language itself would become completely extinct, it is indeed encouraging to find that such intellects as the land was never wanting in, could not contain themselves but exhibit to the intellectual world their inborn and intuitive gifts of learning and knowledge by composing verses of a very high standard on subjects of piety and virtue necessary to improve the present day living.

From ancient times it has been observed that mere platitudes of noble thoughts and ideas never appealed to the ordinary minds but such thoughts and ideas if incorporated in the lives of ideal individuals whose lives and actions are spirit-stirring, generally found favour and appealed to the public and became indelibly imprinted in their minds. For instance no amount of precept to adhere to truth under any difficulties can make a firmer root in the hearts of men than the noble example of **Harischandra**.

It is therefore refreshing to have such a poem as this composed by Mr. T. S. Kannapiran Pillai who has devoted all his life to the study of the Tamil Language and has been performing Kalatche-

pams of extraordinary ability with erudition and eloquence for which he has rightly earned the title of **Prasanga Ratnakaram.** In the heroine of the poem Ponnachiar (பொன்னைச்சியார்), the gradual development of human character by adherence to Divine precepts and the unswerving service to God, to her husband and to her fellow-beings have been beautifully depicted by the author. It need hardly be said that such a poem will ennoble the hearts of our ladies and render them fit for the happiness and prosperity of every household.

The reformation brought about in the mentality of Villi by Ramanujar's teachings is wonderfully instructive and interesting. The truth that God looks to the hearts of men and not to their outward appearances has been very instructively depicted in the life of Uranga Villi who in his practical living displayed the highest ideals of his true faith in the Fatherhood of God and Brotherhood of man which he had imbibed from the teachings of his Guru Ramanujar. Who would not be proud of such a disciple? The Guru naturally showed his love and partiality to the heart of Uranga Villi, though of a low caste, in preference to his other disciples of the highest caste who in outward appearances only, pretended to be his followers. The incidents beautifully illustrated by the author could not fail to create an imperishable impression in the minds of the readers.

In placing such a poem before his readers, the author had spared no pains to make it easy in style, full of piety and virtue ennobling in views and thoughts and really useful in life. The public have to be grateful to him for this addition to the Tamil Literature as the result of his exhuberence of experience in the course of Kalatchepam extending over a period of 14 years. The rapt attention with which his lectures are being heard, of which I can bear personal testimony and the spirit created in his hearers to lead a life of unerring truth and justice are sufficient indications of the merit of the author.

Long before the introduction of electric lights, there had been a Tamil adage 'சுடர்விளக்காயினும் நன்ருய் விளங்கிடத் தூண்டுகோல்

ஒன்று வேண்டும்' (Even a bright light to shine brighter requires a stick to kindle up the wick). The author, however bright his poem is, has thought it necessary that in order that it may shine brighter someone should stir up the wick and however undeserving I may be, he has asked me as one who is second to none in his love for Tamil to serve as the stirring stick to give a **Foreword** to appeal to the public. With profound humility I ventured to do it.

I need hardly say that I shall feel more than gratified if I should serve as such a stick to enable the author's attempt to find favour which it richly deserves.

SIVDALE, VEPERY,<br>MADRAS, 17—6—'38.

**P. M. Sivangnana Mudaliar**

# முன்னுரை

திக்குற்ற சீர்த்தி இராமானுசர் செய்த வைணவத் திருப்-பணியை அறியாதார் இலர். அப்பெரியார் வாழ்க்கைச் சரிதை-யில் பல சிறு நிகழ்ச்சிகள் நிகழ்ந்துள்ளன. அவற்றுள் பிள்ளை உறங்கா வில்லியார் சரிதமும் ஒன்ருகும். இச்சரிதத்தில் நாம் அறியக்கிடக்கும் நீதிகள், வைணவப் பெருநெறியின் உண்மை, தாழ்ந்த மக்கள்பால் நம் பெரியார் செய்த தொண்டு, உள்ளும் புறமும் ஒத்த ஒழுக்கம் இவை போன்ற பலவாம்.

இன்று நம் நாட்டினர் கண் விழித்துத் தாழ்குலத்தாரிடத்து அன்பு கொண்டு வாழ முயலக் காரணமாயிருப்பது, எண்ணூறு ஆண்டுகளுக்கு முன் இராமானுசர் செய்தருளிய அரும்பெருஞ்-சேவையே என்பது மிகையாகாது. வைணவப் பெருமக்கள் தாழ்ந்த மக்களுக்கு எவ்வளவு சிறந்த தொண்டாற்றியிருக்கின்-ருர்களென்பதை அறிந்துகொள்ள இராமானுசர் வரலாற்றில் இரு நிகழ்ச்சிகள் அறியப்படுகின்றன: ஒன்று, இராமானுச-ருடைய ஆசிரியர் பெரிய நம்பி என்னும் அந்தணர், மாறனேர் நம்பி என்னும் ஹரிஜன பத்தருக்குச் செய்த தொண்டு; மற்-ருென்று, இந்நூலுள் கூறப்படும் 'பிள்ளை உறங்கா வில்லியார்' என்னும் வேடச்சாதியிற் பிறந்த பத்தரிடத்து இராமானுசர் காட்டிய அன்புடன் கூடிய சமத்துவம் ஆகும்.

இராமானுசர் வரலாற்றின் உயர்ந்த கொள்கையை விளக்-கும் இச்சிறு கதையை யான் அன்பர்களுக்குச் சொல்லவேண்டும் என்று நினைத்தேன். யான் கதை சொல்வதையே காலப்போக்-காகக் கொண்டவனுதலின், என் சிறிய சேவையை இவ்வாறு-தான் செய்ய முடியும். அச்சமயம், காஞ்சிபுரத்தில் வசிப்பவரும், சிறந்த தேச பத்தரும், தாழ்குல மக்களுக்கு இரவும் பகலும் உண்-மைச் சேவை புரிந்து வருபவருமாகிய என் நண்பர் டாக்டர் பி. ஆர். இரகுராம ஐயரவர்கள், தமது அரிஜன அபிவிருத்திக்

கழகத்தில் இச்சரிதத்தை உபந்நியாசம் செய்யுமாறு என்னை அழைத்தார்கள். அவர்கள் அழைத்த அன்றே இச்சரிதத்தைச் செய்யுளாக்கிக்கொண்டு சென்று அக்கழகத்தில் பிரசங்கம் செய்தேன். இராமானுசர் இருந்த காஞ்சித் தலத்திலேயே இச்சரிதம் முதன்முதலில் பிரசங்கிக்கப்பட்டது. பிறகு, நண்பர் டாக்டர் அவர்களின் தூண்டுதலால், திருப்பாணாழ்வார், ஆளவந்தார், மாறனேர் நம்பி முதலிய பெரியார்களின் சரித்திரங்களும் இம்முறையிலேயே மேற்குறித்த கழகத்தில் உபந்நியசிக்கப்பெற்றன. அவற்றுள், இச்சரிதம் முதலாவதாக இப்பொழுது நூல் வடிவில் வெளியிடப்படுகின்றது.

தமிழ்ப் பேரறிஞர் பலர் தமிழ் மொழிக்குச் சிறந்தபணியாற்றும் இந்நாளில், சிறியேன் இச்சிறு நூலை வெளியிடுவது என் கவித்திறத்தைக் காட்ட வேண்டுமென்ற ஆசையால் அன்று; இராமானுசர் தமிழ் மொழிக்கும் தமிழுலகிற்கும் செய்த சேவையைச் சொல்லும் வாயிலாகச் சிறிது தமிழ்த் தொண்டும் செய்ய வேண்டும் என்ற ஆவலாலேயேயாகும்.

பாடுவதும் பேசுவதும் தவிர மற்றொன்றும் அறியாத சிறியேன் இந்நூலை வெளியிடத் தயங்கிய காலத்து என்னை உற்சாகப்படுத்தி, இந்நூலிலுள்ள வழுக்களைக் களைந்து, முறைப்படுத்தித் தந்தவர்கள் வித்துவான் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளையவர்கள். அவர்கள் தங்கள் சிரமத்தையும் கருதாது, மலர்ந்த முகமும் கனிந்த மனமும் உடையவர்களாய் இந்நூலை நன்கு நோக்கிய பெருந்தன்மை அவர்கள் இடைவிடாது செய்து வரும் தமிழ்ப்பணியின் சிறப்பை விளக்குகின்றது. அவர்களுக்கு அடியேன் இன்றும், வருங்காலத்திலும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இச்சரிதத்தையான் தமிழ்ச்செல்வர் திருவாளர் பொன்னிருளப் பிள்ளையவர்கள் இல்லத்தில் பிரசங்கிக்கக் கேட்டு மகிழ்ந்து, இதனை நூல் வடிவில் யான் வெளியிடக் கருதிய போது என் விருப்பிற்கிணங்கி இதற்கு ஆங்கிலத்தில் அணிந்துரை தந்து

என்னை மகிழ்வித்த திவான் பகதூர் P.M. சிவஞான முதலியாரவர்-களின் பேரன்புடைமைக்குப் பெரிதும் கடமைப்பட்டிருக்கின்-றேன்.

இந்நூலை நல்ல முறையில் பதிப்பித்துப் பிரசுரிப்பதிலும் சிறியேனை ஆதரிக்கும் விஷயத்திலும் பெருமுயற்சியுடைய 'ஆயர் குலத்தினில் தோன்றும் அணி விளக்கு'களாகிய திரு. எம். அப்பாதுரைப் பிள்ளை அவர்களையும், திரு. சி. வி. திருவேங்கடம் பிள்ளை அவர்களையும் சிறியேன் என்றும் என் வாழ்க்கை நெறிக்கு வழி காட்டிகளாகப் போற்றுவேன்.

கலைச்செல்வத்தின் அருமையுணர்ந்து அடியேனை ஆதரிக்-கும் தமிழன்பர்கள், இத்துறையில் தொடர்ந்து முயல எனக்கு ஊக்கம் தருவார்களென்று நம்புகின்றேன்.

20—6—'38<br>சென்னை

தி. சு. கண்ணபிரான்

# பொருளடக்கம்

பொருள் பக்கம்


| | |
|---|---|
| Foreword .... .... .... .... | v |
| முன்னுரை .... .... .... .... | ix |
| சரிதச் சுருக்கம் .... .... .... .... | xiii |
| வணக்கம் .... .... .... .... | xxv |
| உரிமையுரை .... .... .... .... | xxvi |
| பிள்ளை உறங்கா வில்லியார் சரிதம் .... .... | 1—29 |
| செய்யுள் முதற்குறிப்பு அகராதி .... .... | 31 |

THE MADURA TAMIL SANGAM

ஸ்ரீ:

## சரிதச் சுருக்கம்

ஸ்ரீவைஷ்ணவத்தின் வளர்ப்பிடமாகிய திருவரங்கத்திற்கு அணித்தாய்க் காவிரியின் கரையில் நல்வளம் நிறைந்த உறை-யூர் என்னும் பதியுளது. வைணவப் பெருமக்கள் தங்கள் தலைமிசைக் கொண்டு துதிக்கும் திருப்பாணாழ்வார் அவதரித்த நற்பதியாகிய உறையூரைத் தலைநகராகக் கொண்டு இற்றைக்கு எண்ணூறாண்டுகட்குமுன் மனுக்குலச் சோழர் குடிப் பிறந்த அகளங்கன் என்னும் அறம் வழுவா மன்னன், சோழ நன்-னாட்டை ஆண்டனன். அவனது அரண்மனையில் காவலர்-களாய்ச் சேவித்தவர்களில் பிள்ளை வில்லி, வண்ட வில்லி, செண்ட வில்லி என்பார் மூவர். அவர்கள் புலித்தோலுடையும் குன்றி மணி மாலையும் புனைந்து, கையில் வில் பிடித்து, காடுதோறும் திரிந்து, விலங்குகளை வேட்டையாடி வாழும் வில்லியர்கள்; காற்-றைப் போன்ற கடுநடையும், கடலைப் போன்று பரந்த வீர நெஞ்-சும், காலனைப் போன்று நெறி பிறழாத் தன்மையும், தங்களைப் பிறர் புகழினும் இகழினும் மகிழ்வதும் சினப்பதும் இல்லாத மாண்பும் உடையவர்கள்; அன்றியும், மதயானைகளின் துதிக்கை-யைப்பற்றி ஈர்த்துச் சென்றும், புலிகள் கூட்டத்துள் புகுந்து கலக்கியும் திரிகின்ற வலியுடையவர்கள்.

அவர்கள் ஆற்றலையும் அறம் வழுவா ஒழுக்கத்தையும் கண்ட அகளங்கச் சோழன், அவர்களை மனை காக்கும் சிறு தொழிலி-னின்றும் நீக்கித் தன் மெய்காப்பாளர்களாக்கி, மாதந்தோறும் ஆயிரம் பொன் சன்மானம் தந்து மகிழ்வித்தான். வில்லியர் மூவரில் முதல்வராகிய பிள்ளை வில்லி என்பார், மன்னன்பால் அன்பு பூண்டொழுகி, உறக்கமின்றி இலக்குமணன் இராகவனைக் காத்ததே போலக் காவல் புரிவார். அதனால், அவருக்குப் பிள்ளை உறங்கா வில்லியார் எனப் பெயராயது. மன்னனுப்

அவரை மார்புறத் தழுவி, 'அன்ப, என் குலமான மனுக்குலத்து உதித்த வள்ளல் இராகவன், நின் குலமாகிய மறக்குலத் தலைவன் குகப்பெருமானை, 'அன்புடையாய், நீ என் துணைவன்,' என்று தழுவினானன்றோ! ஆதலின், உன்னை உயிரெனப் பிரியாது என்றும் வாழ்வேன்!' எனப் பல மொழிந்து, வில்லியாரின் வீரத்தால் பகலில் நடப்பார் போல மன்னர் போரிடை அச்சமற நடந்து வெற்றி கொண்டு வாழ்ந்தான்.

இவ்வாறு மன்னனும் வில்லியாரும் மகிழ்வுற்று வாழும் நாளில், மண்ணிடைப் பொன் பிறக்கும் வழக்கென, வில்லியர் குலத்தில் ஒரு பெண்மணியார் பிறந்து, மன்னர் மகளிரும் துதிக்கும் வண்ணம் அழகும் அறிவும் அமைதியும் உடையவராய், பொன்னியார் என்னும் பெயருடன் வளர்கின்றதை அறிந்த மன்னன், அவரை வில்லியாருக்கு மணமுடித்து, உறையூரை அடுத்துள்ள திருவெள்ளறை என்னும் தலத்தில் திருமாளிகை ஒன்று தந்து, அங்கு வசிக்கச் செய்தனன். வில்லியார், 'நங்கள் மறக்குலத்தில் இப்படி ஓர் அழகுடைப் பெண் இருந்ததில்லை! இவளை அடைந்தது நமது புண்ணியப் பேறேயாகும்!' என்று கருதி, காதலால் மயங்கி, பொன்னியாரை ஒரு போதும் விட்டுப் பிரிந்திருக்க இயலாதவராய், 'நம்மையே கதியெனக் கருதிக் கைப்பற்றிச் சுற்றமும் தாயும் துணையும் துறந்து வந்த இக்கற்புடையாள் எங்ஙனம் தனித்திருப்பாள்!' என்று நினைப்பவராய், ஒவ்வொருநாளும் பொன்னியார் தம்மைப் பின்தொடரச்சென்று அரசன் மெய் காக்கும் தொழிலைச் செய்து, நடுப்பகலில் திருவெள்ளறைக்கு மீள்வர்.

இதுவே வழக்கமாய்ப் பன்னாள் செல்ல, குற்றம் தரும் அறியாமை நீங்கிச் சஞ்சலம் கொண்ட மனம் தெளிந்து, மக்கள் நலம் அந்தம் இல்லதோர் நாடாகிய பரம பதத்தை அடைவதற்கு வைணவம் என்னும் வான்பெருவழி காட்டிப் பத்திப் பயிரை வளர்க்கின்ற இராமானுச முனிவர், திருவரங்கத்திருந்து கூரத்தாழ்வார் முதலியாண்டார் என்பார்க்கும் மற்றை

மாணவர் பலருக்கும் திருமால் பத்திமை என்னும் தெய்வ வாழ்வளித்து வருநாளில் ஒருநாள் தொண்டக்குலத்தினர் சூழச் சென்று காவிரியில் நீராடி, நெடுமாலைப் பூசித்து, ஒருபால் இருப்ப, பிள்ளை உறங்கா வில்லியார் தம் மனைவியார் பின்தொடர உறையூருக்குப் போய், மன்னனிடத்தில் சேவகம் புரிந்து, திருவெள்ளறைக்குத் திரும்பி வரும்போது காவிரியாற்றைக் கடக்க வேண்டியதாயிற்று. பொன்னியம்மையார் ஆற்று மணலில் கால் வைத்து நடக்க, வெயிலால் வெதும்பிய மணல் தம் அடிகளைச் சுடுவதனால் சற்றே வருந்தி நிற்க, வில்லியார் அது கண்டு உள்ளம் வருந்தி, 'பொன்னே, மணியே, தேனே, கண்ணே, உன் அடிகள் சுடப்படுவது என் கண்களே சுடப்படுவது போல்கின்றதே!' என்று கூறி, அம்மெல்லியலார் அடிகள் சுடாதிருக்கத் தமது விலை மிகுந்த உத்தரீயத்தை எடுத்து மணலில் விரித்து, அதன்மேல் அவரை நடத்தி, வெயில் படாமல் வெண்குடை பிடித்து, மெல்ல மெல்ல அழைத்துப் போயினர்.

அக்காட்சியை இராமானுச முனிவரின் மாணவர்கள்கண்டு அதிசயித்து, தங்கள் ஆசிரியரை வணங்கி உரைக்க, யதிராசரும் அத்தம்பதிகளின் பிரயாணக் காட்சியைக்கண்டு அன்பும் அருளும் கொண்டு, 'கருணைக்கடலாகிய திருமால் இவ்வுலகத்துள்ள உயிர்களை வேண்டியதெல்லாம் அளித்துக்காக்கும் திறத்தை இவ்வீரர் தம் மனைவிபால் காட்டும் அன்பு நன்கு தெரிவிக்கின்றது! என்ன அன்பு! என்ன காதல்! பெண் மக்கள் புருடர்களால் அன்பொடு போற்றற்குரியவர்கள் என்பது உண்மையேயாம். இவர்கள் ஒருவரிடம் ஒருவர் கொண்ட அன்பும் அருளும் எந்நாளும் குன்றாதிருக்கக் கூடுமோ! அழகு மலர்ந்து மணக்கும் இவ்வாலிபம் மறைந்து முதுமை வந்து எய்தும் காலத்தும் இவர்கள் காதல் நிலை கெடாதிருப்பது சாத்தியமோ! இன்று இவர்கள் வளர்க்கும் தெய்வக்காதலில் ஒரு சிறு பகுதியைத் திருவரங்கன் சேவடியில் வைத்துப் பூசிப்பார்களாயின், என்றும் அழியாத இன்ப நிலையை அடைதல் கூடுமன்றோ!' என்று நினைத்து, மாணவரில் ஒருவரை ஏவி அத்தம்பதிகளை அருகில் அழைப்பிக்க,

வந்த வில்லியார் வணங்கி நிற்க, யதிராசர் அன்பொடு வாழ்த்தி, 'ஐயன்மீர்' நீர் இருப்பது எந்தவூர்? உமது தொழில் யாது? குலம் யாது? நும் பெயர் என்னை?' என்று வினவ, வில்லியார், 'அடியேன் வசிப்பது திருவெள்ளறை; உறையூரில் அகளங்க மன்னன் மெய்காப்பு, தொழில்; குலம், மறக்குலம்; பிள்ளை உறங்கா வில்லி என்பது பெயர்,' என்று பதிலுரைத்தனர். யதிராசர், 'நல்லது! அன்பரே, இந்த அம்மையார் யாரோ!' என்ன, 'இவள் அடியேனுக்கு அருமை மனைவி,' என்று வில்லியார் சொல்ல, 'அப்படியாயின், வழியில் விலை மிகுந்த பட்டுப் போர்வையை விரித்து இவரை நடத்திச் செல்ல யாது காரணம்?' என்று உடையவர் கேட்க, வில்லியார், 'ஐயன்மீர், நால்வகைக் குலத்திலும் இவள் போன்ற அழகி பிறந்ததுண்டோ! எங்கள் சாதியார் செய்த தவப்பயனுலன்றோ இவள் எம் குலத்திற் பிறந்தனள்! அந்தணர் முதலிய மேல் சாதியாரும் இவள் போல் ஒருத்தியைப் பெறின், தெய்வ மாதென்று வணங்கமாட்டாரோ! அத்தகைய இவளுடைய சிவந்த பாதங்கள் இந்த ஆற்று மணலில் புதைந்தால், மிக வருந்துமன்றோ! எனவே, இவள் நடக்கும் வழியில் சீலை விரித்து இவளை அழைத்துச் சென்றதில் அதிசயமென்ன?' என்றனர். உடையவர், 'அதிசயம் இல்லை; மெல்லியலார் வீட்டில் வருத்தம் இன்றி இருக்க, ஆடவர் வெளியில் சென்று தொழில் செய்து மீள்வது இயல்பன்றோ? அவ்வாறன்றி, இவ்வம்மையார் வருந்தும்படி இவரை நீர் உடனழைத்துச் செல்லுவது எதற்காக?' என்ன, உறங்காவில்லியார், 'அடிகளே, தாங்கள் சொல்லியது மெய்யே. ஆயினும், என் ஆருயிர்க்குத் துணைவியாகும் இவளுடைய களியூட்டும் கண்களை அடியேன் அடிக்கடி பார்த்து மகிழ்வதால், வாழ்க்கைச் சுழலில் உண்டாகும் சோர்வை மறக்கின்றேன். ஒரு கணம் இந்தக் காதற்கண்களைக் காணேன் ஆயின், உயிரிழந்த உடல்போல ஆவேன். உடனழைத்துச் செல்லுவது இதற்காகவே,' என்றனர். இராமானுசர், 'அன்பரே, உங்கள் காதல், வாழ்க்கையில் தளர்விலா மகிழ்வூட்டும் என்பதை அறிந்தேன். இவ்வம்மையாரின் நல்-

விழிகள் உமது சோகத்தை நீக்க வல்லவை என்பதும் மெய்யே. ஆயினும், பிறந்தோர் யாரும் முதிர்ந்து தளர்ந்து விருத்தராவது உண்மையன்றோ? அவ்வாறு முதுமைப்பருவம் வந்தபோது இந்-தக் கொழுவிழிகள் இன்பம் ஊட்ட வல்லவையாகுமோ? அன்றி-யும், அந்த வார்த்திக காலத்தில் குறையா இன்பம் தர வல்லது யாதோ? எதனால் என்றும் துயரில்லாத மன நிலை பெறுதல் கூடும் என்பதை நீர் ஆராய்ந்தீரோ? தன் நிழலை அளந்து நாழிகை பார்ப்போன் ஒருவன், நிழலின் முடிவிடத்தைக் குறித்-துக்கொள்ளாமல் அளப்பானாயின், அவன் எங்கு முடிப்பான் தன் அளவினை? அது போல, வாழ்நாளின் முடிவெல்லையில் ஒரு குறிப்பும் இன்றி, உண்பதும் உடுப்பதும் உறங்குவதுமாய் நாட்-களைத் தொலைத்தால், பிறவிப்பயனைப்பெறுதல் எந்நாள்! மீளாத் துயரினின்றும் விடுதலை பெறுவது எப்போது! மேலும், அழ-கமைந்த வாலிபமும் செல்வம் மிகுந்த வாழ்வும், இந்த ஆற்று மணல் சூரியன் மேல் திசையில் ஏறஏறத் தானும் சூடேறி அஸ்தமனம் நெருங்கியவுடன் சூடு குறைந்து குளிர்ச்சியடைவது போல, வளர்ந்து முதிர்ந்து மறைந்துவிடுவதாகும். தேன் குடத்தைமொய்த்து உறவாடும் எறும்புகளைப்போல, நம் சுற்றத்-தினர் நமது நல்வாழ்வில் வந்து நம்மைப் புகழ்ந்து நம்முடன் கலந்துண்பர். வெறுங்குடத்தின் அருகிலும் எறும்புகள் நாடுவ-தில்லை. வறிஞனை ஒருவனை மனைவியும் விரும்பாள். ஆதலின், இவர் விழிகளால் எய்தும் இன்பம் சில நாள் நிலைத்து ஒரு நாள் அழிவதாகும். என்றும் வற்றாத பேரின்பத்தை அளிக்கும் அருள் கண்ணுடைய இருவர் — உங்களைப்போன்ற காதலர்—இருக்கின்-றனர். அவர்தம் இளமை மாறாக் கண்ணை நீவிர் இருவீரும் ஒரு முறை கண்டுவிடுவீராயின், பின் என்றும் அதனை மறவீர்! அழியா இன்பமும் அடைவீர்! அவர்தமை அழகிய மணவாளர் எனவும் அரங்கநாயகியார் எனவும் அறிந்தோர் சொல்லுவர். அரங்க நாயகியாரை இவ்வுலகத்தையும் உயிர்களையும் பெற்ற அன்னையார் என அறிக! அம்மணவாளர் அருள் வடிவினர்; இருண்டமேகத்தை-யும் சமுத்திரத்தையும் பருத்த மதயானையையும் போன்ற திரு-

மேனியர்; தம்மக்கள் பிழைசெய்தாலும் மன்னித்து அருளே தருபவர்; உயிர்களுக்குத் தீமைசெய்யும் அசுரகுணம் உடையவர்களை அழிக்கின்ற பெருந்தோள் வலியினர்; ஒரு கரத்தில் சங்கு தரித்து, ஒரு கரத்தில் அசுரரை அழிக்கும் சக்கரம் எடுத்து, மற்றொரு கையால் தம் மக்களை 'அஞ்சன்மின்!' என அருளி, நாலாங் கரத்தால், 'என் அடிகளை அடையுங்கள்!' என அழைப்பவர் காணீர்! தேவர்களின் தலைவர் அவர்; நம்முடன் எங்கும் பிரியாது வருபவர்; நாம் வேண்டாமலே நமக்கு வேண்டியவை அனைத்தும் தருபவர். இத்தகைய தயாநிதியாம் தந்தையாரையும் தாயாரையும் நீவிர் தரிசிப்பின், மற்றொரு காட்சியைக் கண்டு மகிழாது உங்கள் மனம்! ஆதலின், இருவீரும் அவ்விருவர் அழகிய விழிகளைக்கண்டு என்றும் பிரியாது வாழ்வீராக!' என்று கூறினர்.

இதைக் கேட்ட பிள்ளை உறங்கா வில்லியாரும் பொன்னி அம்மையாரும், முன்னாள் தேடிப் புதைத்த நிதியை வைத்த இடம் மறந்துபோய் வருந்தியவர்கள், அஃது இருக்கும் இடத்தை ஒரு சித்தர் சொல்லக் கேட்டதே போல, உள்ளம் களித்து, உடையவர் அடிகளில் பணிந்து, 'எங்களை ஆண்ட அருட்கடலே, இன்றே அவ்விருவரையும் தரிசிக்க அருள் புரிவீர்,' என்று அவரைப் பின்பற்றிச் சென்று, காவிரியில் திருவூறல் உற்சவம் கொண்டு எழுந்தருளியிருக்கும் அழகிய மணவாளரைத் தரிசித்து, இராமானுசரால் பஞ்ச சம்ஸ்காரம் செய்யப் பெற்று, பரம பாகவதராய், 'பிள்ளை உறங்கா வில்லி தாசர், பொன்னாச்சியார்,' என்னும் திருநாமம் உடையவராய்த் திருவரங்கத்தையே வசிக்கும் இடமாகக் கொண்டு, தமது செல்வமனைத்தையும் திருமால் அடியார்க்கு அன்னமிடுவதில் செலவிட்டு, அகளங்கச் சோழனையும், வண்ட வல்லி செண்ட வில்லிகளையும் உடையவர் திருவடிகளில் அடைவித்து வாழ்ந்திருந்தனர்.

அந்நாளில் இராமானுசர் நூற்றிருபது வயதாகிய தொண்டு கிழவராயிருந்தும், நியமங்களைத் தவறாது அநுஷ்டிப்பவர் ஆதலால், தினமும் விடியலில் எழுந்து தம் அருமை மாணவர்-

களாகிய கூரத்தாழ்வாரும் முதலியாண்டாரும் இரு பக்கமும் ஆதரவாய்த் தாங்கி வரக் காவிரிக்குச் சென்று நீராடி, பூசை முடித்துத் திரும்பும்போது இரு சீடரின் கைம்மேலும் ஈரத் துணியை இட்டு, அதன்மேல் தம் கரத்தை வைத்துப் பிடித்துக்கொண்டு வருவார். ஒருநாள் நீராடித் திரும்பும்பொழுது உறங்காவில்லியார் இடை வழியில் சந்தித்து வணங்க, உடையவர் அவரை அருகில் அழைத்து, மாணவர் கைம்மீதிருந்த தம் திருக்கரத்தை எடுத்து வில்லியாரின் தோள்மேல் வைத்துச் சாய்ந்து நடந்து, தம் மடத்துள் நுழைதலும், இதைக்கண்ட கூரேசரும் முதலியாண்டாரும் தம்மில் அதிசயித்து, 'அந்தணர் கரத்தையும் ஈரத்துகிலால் தொடும் நம் குருநாதர், வேட வில்லியார் தோள்மேல் சாய்ந்து நடந்த விந்தை இருந்தபடி என்னே!' என்று கருத, அவர்கள் நினைவைக் குறிப்பாலறிந்த யதிராசர், 'மறை உணர்ந்த மாணவர்காள், நம் உள்ளத்தில் என்றும் நீங்காத அழுக்கு ஒன்றுண்டு. அதுதான், 'நாம் உயர் குலத்தேம்!' என்னும் அழுக்கு. அதனால், நாம் எத்துணைச் சிறந்த வைணவர்களாயினும், அழகிய மணவாளர் நம்மொடு கலந்து மகிழ்வதில்லை; இந்த வில்லியாருடைய உள்ளமோ, 'நாம் அனைத்துயிரினும் தாழ்ந்தேம்!' என்னும் நினைவால் தூய்மை பெற்றுளது. அதனால், இறைவர் இவரொடு கலந்து மகிழ்கின்றார். எனவே, மறையவரைக்காட்டிலும் இவர் உயர்ந்தவர் - சிறந்தவர் என்பது எம் எண்ணம்,' என்று அருளிச்செய்து, அவர்கள் ஐயத்தை நீக்கினார். இங்ஙனம் பன்னாட்கள் சென்றன.

**பி**ன்பு யதிராசர் தம் திருமடத்திலுள்ள சாமானிய பாகவதர் சிலர், உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுபவராய் மெய்யடியார் போல நடித்து, உறங்கா வில்லியார் செய்யும் அன்புப் பணியில் குறை கூறித் திரிவதை அறிந்து, அப்புல்லறிவாளர்க்கு நல்லறிவு ஊட்டக் கருதி, ஒரு நாள் நள்ளிரவில் எழுந்து, அப்பொறாமையாளர் நாளை உடுத்தற்குரிய மடித்துகில் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு முழத்தைக் கிழித்து எடுத்துப் பத்திரப்படுத்திவிட்டுத் தம் படுக்கை சேர்ந்தார்.

பொழுது புலர்ந்ததும் அவர்கள் நீராடி வந்து, தங்கள் மடித்துணிகள் கிழிக்கப்பட்டிருப்பதை அறிந்து சினந்து கூகூவெனக் கூவி, ‘பாவி எவனோ திருடன் துணிகளைக் கவர்ந்தான் !’ என்று வைதார்கள் ; அன்றியும், குருநாதரின் அடிகளில் வீழ்ந்து, பொன் பறி கொடுத்தார்போலப் புலம்பினார்கள். உடையவர் அது கண்டு மனத்துள் நகைத்து, ‘வருந்தாதீர்கள் பரம பத்தர்களே! நமது குருகுலத்தில் நுழைந்து திருடக் கூடியவன் சாதாரணக் கள்வனாயிரான். வந்த திருடனும் ஒரு பாகவதனாகவே இருக்க வேண்டுமென்று கருதுகின்றேன். புறத் திருடனாயின், துகில்களை முற்றிலும் கொள்ளைகொண்டிருப்பான். தனக்கு வேண்டிய ஆடையை உங்கள் ஆடைகளிலிருந்து சிறிது சிறிதே கொண்டு சென்றபடியால், அவன் ஓர் உத்தமத் திருடனாகவே இருத்தல் வேண்டும். ஆதலின், அடியார்க்குத் தியாகம் செய்ததாகக் கருதி மகிழுங்கள்! அவனைச் சபிக்க வேண்டா,’ என்று தேற்றினர். தேற்றியும், அத்தீயர்கள் முணுமுணுத்துக்கொண்டேயிருந்தார்கள்.

‘எம் பொருள் யாவும் இறைவன் அடியார்க்கே உரியன!’ என்று புறத்தே பேசி, சிறு துணிக் கந்தைகளின்பால் சென்ற சிந்தையினராய்ப் புலம்பும் அச்சிறுமா மனிசர்க்குப் பிள்ளை உறங்கா வில்லிதாசருடைய பெருங்கருணைத் திறத்தையும் பொன்னாச்சியாரின் தியாக புத்தியையும் விளக்கிக் காட்டுதற்குக் கருதிய இராமானுச முனிவர், ஒருநாள் இரண்டு பாகவதர்களைத் தனியே அழைத்து, ‘நீவிர் இருவீரும் இன்றிரவு உறங்கா வில்லியார் திருமாளிகைக்குச் சென்று, பொன்னாச்சியார் அயர்ந்து தூங்கும் சமயம் அறிந்து, அவர் திருமேனியில் பூண்டிருக்கும் நவரத்தினாபரணங்களைக் கவர்ந்து வருதல் வேண்டும். அஞ்ச வேண்டா. நம் மடத்தில் அன்பர்கட்கு உணவிடப் போதிய பொருளில்லை. பொருள் தருகின்ற வள்ளல்களையும் காண்கிலோம். திருமங்கை மன்னர் திருமால் பணிக்காக வழி பறித்துப் பொருள் கொண்ட கதையையும் அறிவோம் அன்றோ! அடியார் பணிக்காகக் களவு செய்வதில் பாவமும் இல்லை.

ஆதலின், மயங்காது சென்று கவர்ந்து வாருங்கள்!' என விடுப்ப, அவர்களும் நள்ளிரவில் வில்லியார் திருமாளிகையுள் புகுந்து, பொன்னாச்சியார் அயர்ந்து துயில்வது கண்டு, மெல்லென அணிகளைக் கழற்றலானார்கள். பொன்னாச்சியார் தம் மீதுள்ள பணிகள் பறிக்கப்படுவதை உணர்ந்தும் எழாதவராய், 'அந்தோ! இவர்கள் யாரோ! இத்தீய செயலைச் செய்யுமாறு இவர்களைத் தூண்டியது இவர்கள் வறுமையே போலும்! ஒஞ்சரித்துச் சயனித்துள்ள என் ஒரு புறத்து அணிகளையே பறித்தார்கள். இவற்றுடன் மீண்டு இப்பணிகளை விற்கப்புகின், இவர்கள் கள்வர்கள் என்று தண்டிக்கப்படுவது உறுதி. மேலும், இப்பணிகள் இந்த ஏழை மக்களின் பல நாள் பசிக்குப் பற்றா. ஆகவே, மற்றொரு புறத்து நகைகளையும் இவர்கள் பறித்துக்கொள்ளட்டும்,' என்று துயில்வார் போன்றே மெல்லத் திரும்பினார். அவ்வளவில் வந்த பாகவதர்கள் நடுநடுங்கி விரைந்தோடிவிட, பொன்னாச்சியார் மிக வருந்தி, 'நான் திரும்பினதே பிழையானது!' என்றும், ஏனைய பணிகளை எவ்வாறு அவர்கள்பால் சேர்ப்பிப்பதென்றும் வருநதியிருந்தனர்.

நடுங்கியோடிய நான்மறையாளர்கள் உடையவர்பால் நடந்ததையுரைத்து, நகைகளைத் தந்து இருப்ப, பிள்ளை உறங்கா வில்லி தாசர் காலையிலெழுந்து, பொன்னாச்சியார் அணியின்றி நிற்கக் கண்டு, 'யாது நிகழ்ந்தது?' என்று வினவ, அம்மையார் இரவு நடந்த திருட்டை உரைத்துப் பணிதலும், வில்லியார் எல்லையிலாத் துயருற்று, 'பேராசை கொண்ட பேதாய்! திருட வந்தவர் யாராயிருப்பினும், அவர் வறியவர் என்று கருதி நம் பொருளை மகிழ்ந்து கொடுப்பதன்றோ நமது கடமை? அவ்வாறன்றிப் பணிகள் பறிக்கப்படுகின்றனவே என்று அஞ்சித் திரும்பினாய். அதனால், அவர்கள் நடுங்கி ஓடினார்கள். நீ வைணவ நெறிக்குத் தகாதவள். உன்னோடு கூடி வாழ்வது எமக்கு இனி ஒவ்வாது,' என உரைத்து, வெளியிற் சென்று நீராடிப் பூசை முடித்து, உணவு கொள்ளாமலும் திருமாளிகைப் பக்கம் போகாமலும் மனைவியாரோடு பேசாமலுமிருந்தார். பொன்-

ஞச்சியாரும், 'தலைவர் பணியில் தவறினேன்!' என்று புலம்பி நைந்து, உண்ணல், உடுத்தல், உறங்கல் இன்றி வருந்தியிருந்தார்.

மூன்று நாட்கள் சென்றன. அன்பர் சிலர் உடையவரிடத்து, 'வில்லியார் பொன்னுச்சியார்பால் ஏதோ ஊடல் கொண்டுளார்,' எனத் தெரிவிக்க, இராமானுசர் அந்தத் தூயவுளத் தம்பதிகளை அருகில் அழைத்து, 'உங்கட்கும் ஊடல் வந்ததோ! என்ன நிகழ்ந்தது?' என்று பல அன்பர்களிடையில் வினவலும், வில்லியார் பணிந்து, 'யதிராசரே, கள்வர்தாமோ, அன்றி அடியவர்க்குப் பணி புரியக் கருதி வேண்டும் பொருள் கிடைக்கப் பெறுமையால் துணிந்து வந்த தூயவர்தாமோ, அறிகிலேன்! சிலர் இவள் அணிகளைப் பறிக்கலுற்றனர். இவள், 'நகைகள் போய்விடுகின்றனவே!' என்று அஞ்சித் திரும்பினாள். பறிக்கலுற்றவர் ஓடிவிட்டனர். வறுமை என்னும் நெருப்பால் சுடப்பட்டாரைக் கள்வர் என்றும் பிறர் என்றும் ஆராய்வதும் தகுதிதானோ! இவள் பொன்னாசையால் புத்தியிழந்தவள். இவளோடு வாழ்வது அடியேனுக்கு இசையாது,' என்று சொல்ல, யதிராசர் பொன்னுச்சியாரை நோக்கி, 'அம்மையீர், இதற்கு யாது சொல்வீர்?' என்று கேட்க, அவ்வம்மையார், 'ஏழைகள் என்று இரங்கி, மற்றொரு புறப் பணிகளையும் கவரக் கடவர்கள் என்று திரும்பியது உண்மையே,' என்ன, வில்லியார், 'இவள் பொய்யும் புகன்றாள்; எனக்கு உதவாள்,' என்று வெறுத்துரைத்தலும், இராமானுசர் வில்லியாரை நோக்கி, 'அன்பரே, வைணவத்தின் தூய நெறிக்குப் புறம்பாய் ஒழுகிய இவரை விலக்கிவிட வேண்டுவது முறையேயாகும். இவர் பேரும் பொன்னியார் என்பது அல்லவா? இவரைப் பொன் என்றே நினைப்போம். ஆகவே, பொன்னைப் பிறர்க்குத் தானம் செய்வது போலவே இவரையும் யாருக்கேனும் தானம் செய்துவிடுவது தகுதி என்று கருதுகிறேன். உமது விருப்பம் யாது?' என்னலும் வில்லியார், 'ஆசாரியரே, தங்கள் திருவுள்ளம் போலச் செய்யலாம். இவளைத் தாங்களே யாருக்காவது தானம் செய்துவிடுவது நன்று,' என்று சொல்லினர். யதிராசர்,

'அங்ஙனமாயின், இப்பொன்னனைய பொன்னாச்சியாரை இங்குள்ளாரில் பிள்ளை உறங்கா வில்லியார்க்கே தானம் செய்தோம். பெற்றுக்கொள்ளுக!' என்று அருள, வில்லியார் திடுக்கிட்டு, 'என் குருநாதரின் பணி இதுவாயின், நன்று!' என்று பணிந்தெழுந்து, பொன்னாச்சியாரின் மெல்லிய கரங்களைப்பற்றிச் சமாதானமடைந்து நின்றனர். அன்பர்கள் இவ்விந்தையைப் பார்த்து அதிசயித்து, அத்தம்பதிகளைப் பலவாறு புகழ்ந்தார்கள்.

உடையவர் அங்குள்ளாரை நோக்கி, 'அன்பீர், இவர்கள் ஈகைக் குணத்தை அறிந்தீர்களோ! வைணவத்தின் அறநெறி இதுவேயாகும். நூல்களைக் கற்கும்போது ஒரு கொள்கையும், ஒழுக்கத்தில் மற்றொரு கொள்கையும் கொள்வது நம் சமயத்தின் இலக்கணம் அன்று. இவர்களைப் பின் பற்றுவீர்களாயின், உங்கட்கு நலம் உண்டாம். அன்றொரு நாள் உங்கள் மடித்துகில்களில் சிறிது சிறிது கிழித்துச் சென்ற கள்வனை ஓயாது சபித்தீர்களே! இன்று இவர்கள் மனப்பான்மையை உணர்ந்தீர்களா? உங்கள் உண்மை ஒழுக்கத்தை உணர்வதற்காக அன்று நாமே உங்கள் ஆடைகளைக் கிழித்தோம் கண்டீர்! இன்று இவர்கள் நற்கருணைத் திறத்தை உங்களுக்குக் காட்டக் கருதி இவருடைய அணிகளைக் கவர்ந்து வர ஏவியதும் நாமே கண்டீர்!' எனப் புகன்று, துணித் துண்டுகளையும் பொன்னாச்சியாருடைய சில அணிகளையும் தருவித்துத் தந்து, 'அன்பர் குழுவில் அரும்பணி புரிவது எளிது. தாழ்குலத்து மக்கள்பால் அன்பு காட்டி அவர்கட்குத் தொண்டு புரிந்து உயர்குலம் என்னும் செருக்கின்றி வாழ்வது அரிதாகும். இவரைத் தாழ்குலத்தோர் என்று நினைத்தீர்கள். உருவத்தால் சிவந்து தோன்றி, உண்டாரைக் கொல்கின்ற எட்டிக்காய் போன்று இருந்தது உங்கள் ஒழுக்கம். உருவத்தால் அழகின்றி, உண்ணச் சுவைதரும் பலாக்கனி போன்று இருந்தது இவர்கள் ஒழுக்கம்,' என்று பல முறை உரைத்து, 'இவர் திருமேனி எமது பரிசவேதி கண்டீர்!' என்று வில்லியாரைத் தழுவி மகிழ்ந்தார். மற்றை அன்பர்களும் அன்று

தொட்டு நல்லொழுக்கம் உடையவர்களாய் இனிது வாழ்ந்திருந்தார்கள்.

இவ்வாறு பன்னாள் கழிதலும், ஸ்ரீ அழகிய மணவாளர் யதிராசரைக் கடாட்சித்து, 'பரம பதத்திற்கு வருக,' என்று அழைத்துக்கொள்ள, யதிராசர் அந்தமில் இன்பத்து அருந்திருநாடெய்தினர். அன்பர்கள் தாயிழந்த கன்றெனத் தவித்தார்கள். நீரில் வசித்தாலும் நிலத்திலும் உயிர் வாழும் தன்மை உடைய ஆமை போன்றார் சிலர், குருநாதரைப் பிரிந்தும் உயிர் வாழ்ந்திருந்தனர். ஆனால், நீருள் எழுந்த தாமரை, நீர் வற்றத் தானும் வற்றி மறைவது போல, பிள்ளை உறங்கா வில்லி தாசர் குருநாதரின் திருவருளையே நினைந்துருகி, தாம் அவர் அடிகளிற் சார்ந்தனர். தம் தலைவரைப் பிரிந்த பொன்னாச்சியார், மலர் வாடி உலர்ந்தால் அதன் மணமும் மறைவதே போல, அழுத கண்ணீர் நிலத்தில் விழுமுன் தரையில் வீழ்ந்து, தம் தலைவரோடு திருமால் அடிக்கீழ்ப் பிரியா இன்பம் எய்தினர்.

தென் குருகைத் தெய்வ முனிவராகிய சடகோபர் உட்கிடையை வளர்த்த உடையவர் வாழ்க! வைணவப் பயிரை வளமுற வளர்த்த காவிரி வாழ்க! பாகவதத் தொண்டினைப் பரிந்து வளர்த்த வில்லியார் வாழ்க! அறம் வளர்த்த அம்மையாரான பொன்னாச்சியார் வாழ்க!

# வணக்கம்

## நம்மாழ்வார்

### கலி விருத்தம்

மன்னு மாமறை வண்மையை நுண்மையால்
பன்னு நற்றமிழ்ப் பாவினில் பாகுசெய்
தின்னல் தீர எமர்க்கருள் மாறனை
முன்னு வார்முயல் கின்றது முற்றுமே. 1

## இராமானுசர்

இருமை யும்தலை எய்துவ'கன் றெம்பிரான்
பெருமை ஈயப் பிறங்கிய வள்ளலை
அருமை வில்லிக் கருள்எதி ராசனை
ஒருமை யால்உளத் துன்னுகிற் பாமரோ. 2

## குரு வணக்கம்

### அறுசீர் விருத்தம்

வந்த மயக்கம் தெளிவித்து வரும்புன் மயக்கின் மருளாமல்
சிந்தை நிறைந்த கலைவெள்ளம் தேங்கத் தமிழே பொழிமுகிலை
முந்தும் நல்லான் குலமணியை முடிவில் குணத்துக் குருமணியைத்
தந்தை அனைய திருவரங்க சாமி மணியைத் தலைக்கொள்வாம்.

---

1. மன்னும் - நிலைபெற்ற, பன்னும் - சொல்லுகின்ற, பா-செய்யுள், இன்னல் - துன்பம், எமர்க்கு - எம்மவர்க்கு, மாறனை - நம்மாழ்வாரை, முன்னுவார் - நினைப்பவர்.

2. இருமை - இம்மை மறுமை, தலை - தலைமை, பிறங்கிய - விளங்கிய, ஒருமை - மன அடக்கம், உன்னுகிற்பாம் - சிந்திப்போம், அரோ - அசை.

3. மருளாமல் - மயங்காமல், முகிலை - மேகத்தை, மணி - இரத்தினம்.

## உரிமையுரை

### நிலை மண்டில ஆசிரியப்பா

*தந்தைசெய் உதவியைத் தான்மேற் கொண்டு*
*முந்துபே ரறிவால் முயன்று முயன்றே*
*உயிர்ப்பால் அன்றியும் கலைப்பால் புகட்டி*
*அயர்ப்பில் நன்றிகள் ஆற்றி மறைந்த*
**சென்னி அம்மை**எம் *அன்னை தனக்குப்*
**பொன்னி அம்மை**யின் *புகழ்நூல் உரித்தே.*

---

உயிர்ப்பால் - உயிரை வளர்க்கும் பால், அயர்ப்பு இல் - சோர்வு இல்லாத, ஆற்றி - செய்து, மறைந்த - மண்ணுலகினின்று நீங்கிய.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# பிள்ளை உறங்கா வில்லியார் சரிதம்

## காப்பு

குறள் வெண்செந்துறை

அன்னைதனைப் பணிகின்றும் அவனியெனும் பெயராள்
ஆருயிர்கள் அத்தனையும் ஆக்கியளிக் கின்றாள்;
இன்னலறத் திருமாலின் வயிற்றகத்துப் படுப்பாள்
ஏதமிலா தவன்தனையே நாதனெனக் கொண்டாள். 1

நிறம்பலவாம் தொழில்பலவாம் நின்றமொழி பலவாம்
நிறைகுணமும் பலவாகி நீடுமுயர் மக்கட்
கறம்பலவாக் கற்பித்த அன்னைதனைப் பணிவாம்;
அச்சுதனை நீங்காத அன்னைதனைப் பணிவாம். 2

கதிர்மதிகள் குண்டலமாக் கருமுகிலே குழலாக்
கரையில்லாக் கடலேழும் அரைபுனையும் துகிலா
அதிரவரும் காற்றுத்தன் ஆருயிராக் கொண்டாள்
அச்சுதனுக் கேவாழும் அன்னைதனைப் பணிவாம். 3

1. அவனி - பூமி, இன்னல் - துன்பம், வயிற்றகத்து - வயிற்றினுள், படுப்பாள் - துயில்வாள் (திருமாலினால் உண்ணப்படுவாள் என்றபடி), ஏதம் - குற்றம்.

2. நீடும் - நெடிது வாழும், அறம் - ஒழுக்கம், கற்பித்த - பயில்வித்த.

3. கதிர் மதிகள் - சந்திர சூரியர்கள், குண்டலம்ஆ - காதணிகள் ஆகவும், கருமுகில் - கரிய மேகங்கள், குழல்ஆ - கூந்தல் ஆகவும், அரைபுனை

அறம்மெலியும் காலத்துத் தன்னருளால் மக்கட்
கவையுணர்த்த வல்லாரை அளித்துமகிழ் கின்றாள்;
மறம்மலிந்த வாள்மைந்தர் தீயசெயுங் காலை
வாளரவின் பிடித்துண்டு வயிற்றடக்கு கிற்பாள். 4

தண்குருகை நாதனையும் பெரும்பூதூர் வள்ளல்
தனையுமளித் துயர்தமிழின் தாபமொழித் திட்டாள்;
மண்பெயராள் மண்புனையும் வைணவத்தின் தெய்வம்
மாதவனை நீங்காத வாழ்வினளைப் பணிவாம். 5

## நூல்

### கட்டளைக் கலிப்பா

மணிம லிந்திடு காவிரி அன்னைதன்
வன்ன மாமுலை வாய்மடுத் துண்டதால்
பணிம யங்கத்த குஞ்செறி வார்கதிர்
பார்வ ணங்கும் பயனுடைத் தென்பரால்
நனிவ ணங்கிமு னிதன தோள்மிசை
நன்கு கொண்டரங் கன்கழல் நண்ணிடும்
அணிவ யங்கிய பாண்பெரு மாள்முனம்
அவத ரித்திடும் அவ்வுறை யூரரோ. 1

---

யும் - இடையில் உடுத்தும், துகில்ஆ - ஆடையாகவும், ஆர் உயிர்ஆ - அரிய உயிர் ஆகவும், அச்சுதன் - திருமால்.

4. அவை உணர்த்த வல்லாரை - அத்தருமங்களை விளக்கவல்ல அவதார புருஷரை, மறம்மலிந்த - வலிமை மிகுந்த, வாள்மைந்தர் - வாளேந்தும் வீரர் (மன்னர்), வாள் அரவில் பிடித்துண்டு - ஒளிமிகுந்த பாம்பு (தன்குட்டிகளைத் தின்றுவிடுவது) போல (பாவம் செய்யும் அரசரை) அழித்து.

5. குருகைநாதன் - திருக்குருகூரில் அவதரித்த நம்மாழ்வார், பெரும்பூதூர் வள்ளல் - ஸ்ரீபெரும்பூதூரில் தோன்றிய இராமானுசர், தாபம் - துன்பம், மண் - திருமண் காப்பு.

1. மணி - அழகு, மடுத்து - நிறைத்து, பணி - பாம்பு, மயங்க - (நுழைந்து செல்ல வழியின்றிக்) கலங்க, செறிவு ஆர் - நெருக்கமுள்ள, கதிர் - நெற்கதிர், பார் - பூமியில், வணங்கும் - தாழ்கின்ற, பயன்உடைத்து-

அன்ன மாநகர் காத்திடும் மன்னவன்
ஆதி மாமனு வின்குலம் தோன்றினன்
மன்னு மாதவச் சோழர்கு டியுளான்
மாட்சி சேர்அக ளங்கப்பெ யரினன்
தன்அ மாத்தியர் சூழவை தன்னிலே
சாரும் வில்லியர் மூவர்அ மைந்துளர்;
கன்ன லார்ந்துது கைத்திடு மாவலிக்
கார்நி றத்தக ரியன மேனியர். 2

ஆற்றல் மிக்கஅம் மூவரும் ஆதியாய்
அழுக்கு டம்பின்அ ரும்புலித் தோலுடை
ஏற்றுக் குன்றிம ணிவடம் தாங்கிவில்
ஏற்றிக் கானத்தி ரிதர மாவெலாம்
வீற்று வீற்றுறக் கொன்றவை ஊனவூன்
மிசைந்தொ ழுக்கமும் மேன்மையும் ஞானமும்
சாற்ற ஏதுமி லாதவல் வில்லியச்
சாதி யாரிடைத் தோன்றிய தன்மையர். 3

அறுசீர் விருத்தம்

காற்றினும் கடிய காலர் கடலினும் பரந்த நெஞ்சர்
கூற்றினும் குணித்து நீதி குறித்தறம் நோக்கும் நீரர்

---

வளப்பம் உடையது, நனி - மிக, முனி - உலக சாரங்க முனிவர், அணி - அழகு, வயங்கிய - விளங்கிய, பாண் பெருமாள் - திருப்பாணாழ்வார்.

2. மனுவின் குலம் - மனுச்சோழன் குலம், மன்னும் - நிலைத்த, அமாத்தியர் - மந்திரிமார், அவை - சபை, கன்னல் - கரும்பு.

3. ஆற்றல் - வலிமை, அரும்புலித்தோல் - அருமையான புலித்தோல், ஏற்று - உடுத்து, வடம் - மாலை, இரிதர - ஓட, மாவெலாம் - மிருகங்கள் எல்லாம் (மா எலாம் இரிதர என இயைக்க), வீற்றுவீற்று உற - வேறுவேறாக, ஊன ஊன் - குற்றமுள்ள இறைச்சி, மிசைந்து - உண்டு, சாற்ற - சொல்லுவதற்கு, ஏதும் - ஒன்றும்.

4. கடிய - வேகமான, காலர் - காலினர், கூற்று - எமன், குணித்து - மதித்து, நீரர் - இயல்பினர், பங்கியர் - குடுமியை உடையவர்.

போற்றினும் மகிழார் புல்லர் இகழினும் கருதார் பொன்செய்
மேற்றிசை சிவந்த தன்ன பங்கியர் வீரத் தோளார். 4

வெங்கரி ஏற்றைப் பற்றி விசையுற ஈர்த்தும் வீறு
பொங்கவல் உழுவை ஈட்டம் புகுந்துருத் தடர்த்தும் ஆற்ரு
தெங்கணும் திரியும் வீரர் இவரியல் புணர்ந்து மன்னன்
தங்குலத் திருக்கை ஈந்து தன்னுடல் காக்க வைத்தான். 5

மூவரில் முதல்வர் வீரர் குழுவினும் முதல்வர் வென்றிக்
காவலன் மெய்யில் வீசும் காற்றையும் காக்க வல்லர்
தேவரின் இமையார் ஆகித் திகிரியின் சுழல்வர்; அன்னர்க்
கேவமில் **உறங்கா வில்லி** எனப்பெயர் ஆய தம்மா! 6

வில்லுடை வில்லி யாரை வேந்தனேர் போதும் நீங்கான்
அல்லிடை விளக்கை மேவும் மாந்தரில் அணைந்து தேர்ந்து
எல்லிடை நடப்பார் போல இகலுடைத் தருவர் சேனை
மல்லுடைத் தறமேல் சென்று மண்முறை திருத்தி ஆண்டான். 7

' என்குலத் தணியாய்த் தோன்றி இறைமொழி தலைமேல்கொண்டு
வன்குலக் கானம் சென்ற வள்ளலும், வாரிப் புல்லி,

---

5. கரி ஏறு - ஆண்யானை, விசைஉற - வேகமாக, ஈர்த்தும் - இழுத்தும், வீறு பொங்க - பெருமை மிக, வல் உழுவை ஈட்டம் - வலிய புலிக் கூட்டம், உருத்து - கோபித்து, அடர்த்தும் - கொன்றும், இயல்பு - தன்மை, மன்னன் - அகளங்கன், குலத்து - அரண்மனையில், இருக்கை - (வசிக்கும்) இடம்.

6. மூவரில் - (பிள்ளைவில்லி, வண்டவில்லி, செண்டவில்லி என்னும்) மூவரில், முதல்வர் - முதலாமவரான பிள்ளை வில்லியார், குழு - கூட்டம், காவலன் - அரசனுடைய, மெய்யில் - உடம்பில், காக்க - தடுக்க, தேவரின் - தேவரைப்போல, இமையார் ஆகி - கண் மூடாதவராய், திகிரியின் - சக்கரத்தைப் போல, ஏவம் இல் - குற்றமில்லாத, ஆயது - ஆகியது.

7. வில் உடை - வில்லையுடைய, அல் இடை - இரவில், மேவும் - நாடுகின்ற, மாந்தரில் - மனிதர்களைப்போல, எல் இடை - பகலில், இகல் - வலி, தருவர் - அரக்கரின், மல்உடைத்து - வலிமையைத் தொலைத்து, அறம் மேல் சென்று - தருமநெறியைப் பின் பற்றி.

8. இறை - (தசரதச்) சக்கரவர்த்தியார், வன்குலக்கானம் - வலிய

'என் குலத் தம்பி நீ; இங் கிவளுன் கேள்,' என்றான் அன்றே
உன் குலத் தெயினன் தன்னை?'' எனஇறை உருகிப் புல்லும். 8

''கண்ணப்ப! நில்,' என் றெந்தை காளத்தி அப்பன் முன்னாள்
வண்ணப்பொன் கரத்தில் பற்றி வாழ்வித்தவாறு நோக்கில்
கண்ணப்பர் செய்த அன்பு தேவரும் காணார் அன்றே?
எண்ணப்ப இஃதெ'தன் றோதி, இறைமனம் உருகிப் புல்லும்.

எண்சீர் விருத்தம்

இன்ன வாறவ்வி றைவனும் இவரும்
ஏய்ந்த நண்பின ராய்மகிழ் காலை
சொன்ன கானவர் தம்மிடை ஓர்மின்
தோற்ற மும்பணி வும்பெரி துடையார்
பொன்னின் மூலம்பு கன்றிடின் மண்ணே
போன்று வேடர்பு லைக்குலத் தெய்திப்
பொன்னி என்னும்பெ யர்புனைந் துள்ளார்
பூவை யையிவர்க் குப்புகன் றிட்டார். 10

இப்பி யில்படும் முத்தினை வயிரத்
தேய வைக்கும் இயல்பென வில்லிக்
கொப்பில் பொன்னிய ரைமணப் பித்தான்
உயர்ம னத்தக ளங்கமன் னன்றான் ;

---

மலைகள் சூழ்ந்த காடு, வள்ளல் - இராமபிரான், வாரிப்புல்வி - சேர்த்துத் தழுவி, இவள் - இந்தச் சீதை, கேள் - உறவினள், எயினன் - வேடன் (குகப் பெருமாள்).

9. எண் - நினைப்பாய், அப்ப - அப்பா (அண்மைவிளி), இஃது - இதை, இறை - அரசன், புல்லும் - தழுவுவான்.

10. ஏய்ந்த - பொருந்திய, காலை - காலத்தில், கானவர் - வேடர், மின் - மின்னல் போன்ற பெண், மூலம் - பிறப்பிடம், புலைக்குலம் - தாழ்குலம், பூவையை - மைனாவைப் போன்ற பொன்னியம்மையாரை, புகன்றிட்டார் - மணம் பேசினர்.

11. இப்பியில் - முத்துச்சிப்பியில், படும் - விளையும், எய்ப்பு அற

செப்பும் மாதொடு றங்காத வில்லி
திருவெள் ளறையில் வதிந்துறை யூருக்
கெய்ப்ப றப்பணி மேல்தினம் சென்றே
எல்லின் மீள்வர் இதுவழக் கம்மா. 11

அறுசீர் விருத்தம்

இருளின்மிசை அஞ்சனம் அப்பியதொத்
தியல்மேனியர் தம்குடி யில்பிறவா
விரிதிங்களும் அஞ்சுறும் நன்முகமும்
வேலொத்த விழிக்கடை யும்சிறிதே
பொருளுண்டென இன்றென நைந்தசையும்
பொய்யாகும் மருங்குலும் மென்னடையும்
அருளும்முடை பொன்னிய ரையகலா
தல்லும்பக லும்பெரி தன்புசெயா. 12

'சுரமாதரும் மாநில மாதர்களும்
துதிசெய்திடு பேரெழில் கொண்டவளை
வரமாக அடைந்தது முன்புரியும்
வளமாதவ மாபயன்!' என்றுகவா,
சுரமாநெறி சென்றுதி ரிந்தயர்வோன்
சுரர்மாதரு கண்டதெ னும்படியே
திரமாதரம் ஒன்றிட வண்மதுவீழ்
சிறையாரளி யில்பிரி யாதவராய். 13

---

வருத்தம் நீங்க, பணி - தொழில், எல் - இரவு, வழக்கு - வழக்கம், அம்மா- அசைச்சொல்.

12. அஞ்சனம் - மை, அப்பியது ஒத்து - பூசியது போன்று, விரிதிங்கள் - (ஒளியைப்) பரப்பும் சந்திரன், விழிக்கடை - (கடைவிழி) கடைக்கண், பொருள் - உண்மை, நைந்து - வருந்தி, மருங்குல் - இடை, செயா - செய்து (செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம்).

13. சுரமாதர் - தெய்வமாதர், பேரெழில் - மிகுந்த அழகு, வளம் மாதவம் மாபயன் - குன்றாத பெரிய தவத்தின் பலன், உகவா - மகிழ்ந்து

தனியேயொரு போதுமி ரார்தமையே
 தஞ்சென்று மணந்தவர் ஆதலினால்
கனியேநிகர் மென்மொழி பின்தொடரக்
 கடிவெள்ளறை நின்றுறை யூர்புகுதா,
நனியேபணி காவல னுக்குதவி
 நடுவெம்பகல் மீளுவர் நங்கையரோ
டினியேதும் அறிந்திலர் இவ்வகையே
 எண்ணில்பக லாகஇ யங்கிடும்நாள். 14

கொத்தைப்படு புன்மல வீறழியக்
 கொடுமாமன மர்க்கட மும்பணிய
மித்தைப்புலை யானபி றப்பொழிய
 வியன்சேர்திரு நாடுவ ளர்த்திடுவார்
பத்திப்பயிர் செய்யுழ வர்புவியில்
 பரவாத பயங்கர சீயம்எனும்
முத்திக்கொரு நாதர்மு னிப்பெருமான்
 முதிர்ஞானஇ ராமானு சப்பெரியோர். 15

---

(செய்யா என்னும் வாய்பாட்டு வினை எச்சம்), சுரமாநெறி - (மா + சுரம் + நெறி) பெரிய பாலை வன வழியில், அயர்வோன் - வருந்துபவன், சுரர் மா தரு - தெய்வ விருட்சமாகிய சிறந்த கற்பக விருட்சத்தை, திரம் ஆதரம் - நிலைத்த அன்பு, ஒன்றிட - பொருந்த, வண்மது - வளப்பமான தேனை, வீழ் - விரும்பும், சிறையார் - சிறகு பொருந்திய, அளியில் - வண்டுபோல.

**14.** தஞ்சென்று - (தஞ்சு + என்று) அடைக்கலம் என்று, தஞ்சு - தஞ்சம் என்பதன் கடைக்குறை விகாரம், உதவி - செய்து, இயங்கிடும் நாள் - நடைபெறும் நாளில்.

**15.** கொத்தை - அஞ்ஞானம், மலம் - மாயையின், வீறு - ஆண்மை, மர்க்கடம் - குரங்கு, மித்தை - பொய், வியன் - அழகு, திருநாடு - பரமபதத்தில், பரவாத பயங்கர - புறச்சமயவாதிகளுக்கு அச்சத்தைச் செய்கின்ற, சீயம் - சிங்கம்.

ராமாநுசர் என்றிட வல்வினைபோம்;
நமன்நாமுறை நாடுநி னைப்பதில்லை;
ராமாநுசர் என்றிட மாமணிசேர்
நன்மண்டப வாயில்தி றந்திடுமால்
ஆமாபுகழ் ஐயனை ரங்கநகர்க்
க றநற்பணி செய்துவ திந்திடும்நாள்
தேமாவளர் தண்துறைக் காவிரியில்
திருமஞ்சனம் ஆடஎ ழுந்தருளி. 16

தொண்டேபுரி பாகவ தக்குழுவும்
தொழுமன்பரும் வந்துது தித்திடவே
வண்டானம் அடைந்துல வும்துறையில்
மணிநீர்துளை கின்றனர்; அவ்வழியே
பண்டேஉறை யூர்புகும் வில்லியர்கோன்
பகல்மீள்பவர் பாவைந லாருடனே
மண்டேய்நெறி அண்மியி ழிந்துதிடர்
மணல்மீது நடந்துவ ழிக்கொளவே. 17

காலைக்கதிர் வெங்கரம் வந்துதழீஇக்
கல்லார்மணல் சற்றுவெ தும்பியிடச்
சோலைக்குயில் அன்னவர் தண்தளிர்போல்
துணைமெல்லடி தாங்கில அம்மவிரைந்

---

16. நமன் - யமன், நன்மண்டபம் - திருமாமணி மண்டபம் (பரமபதம்), ஆ மா புகழ் - ஆகின்ற பெரிய கீர்த்தியுடைய, வதிந்திடும் - வசிக்கும், திருமஞ்சனம் ஆட - நீராட.

17. வண்டானம் - நாரை, மணி நீர் துளைகின்றனர் - அழகிய நீரில் முழுகுகின்றனர், பண்டே - முன்னமே, மண் தேய் நெறி - தரையில் தேய்ந்த வழியில், அண்மி - அணுகி, இழிந்து - இறங்கி, திடர் - மேடான.

18. காலைக்கதிர் - இளஞ்சூரியன், தழீஇ - தழுவி (பொருந்தி), வெதும்பியிட - சூடேற, தண் - குளிர்ந்த, துணைமெல்அடி - (மெல்துணைஅடி) மெல்லிய இரண்டுஅடிகள், ஓலிட்டு - கூவி, குழைவுற்று - குழைந்து, உயிரா - நெடுமூச்சு விட்டு, அயரா - சோர்ந்து, மணிப்படும் - அழகு பொருந்திய,

தோலிட்டெதிர் ஓடலும் வில்லியுளம்
உருகிக்குழை வுற்றுயி ராஅயரா
மேலுற்றம ணிப்படும் உத்தரியம்
விலைமிக்கது மன்னன ளித்ததெடா. 18

'பொன்னே!மணி யே!சுவை ஊற்றெழும்நல்
புத்தம்புதுக் கோல்மது வே!அருமைக்
கண்ணே!உன தாள்மலர் வெம்புவதென்
கண்ணேசுடு கின்றதெ' னக்குழைவார்;
மின்னேரிடை ஏகும்நெ றிக்கணெலாம்
வியன்ஆடை பரப்பிவெ யில்மறையக்
கொன்னேவிரி வெண்குடை ஏந்திமெலக்
கொடுசென்றனர் வல்லுடை வில்லியர்கோன். 19

இவ்விந்தைஇ ருந்தது கண்டவர்தாம்
இராமானுசர் முன்னுரை செய்திடலும்
செவ்விந்தம்எ னும்படி நின்றுயர்தோள்
சேரச்சிரம் நன்குதி ருப்பியவண்
அவ்விந்தைநி கர்த்திடும் மின்னடிகள்
அருமாமணி ஆடையின் மீதுபடிந்
தெவ்வந்தவி ரச்செலும் நேருணரா
இறும்பூது மிகுந்திட எண்ணுவரால்: 20

---

உத்தரியம் - மேலாடை, எடா - எடுத்து. (உயிரா, அயரா, எடா—'செய்யா' என்னும் வாய்பாட்டு வினையெச்சங்கள்)

19. கோல் மதுவே - கொம்புத்தேனே, உன - உன்னுடைய (அகரம் பன்மைப்பொருளில் வந்த ஆறனுருபு), தாள் மலர் - பாதத்தாமரைகள் (உருவகம்), வெம்புவது - வருந்துவது, குழைவார் - இரங்குவார், மின் நேர் இடை - மின் போன்ற இடையுடைய பொன்னியம்மையார், நெறிக்கண் - வழியில், கொன்னே - விகற்பமற, மெல - மெள்ள, வல் உடை -வலிமை உடைய, கோன் - தலைவர் (உறங்கா வில்லியார்).

20. இவ்விந்தை - இந்த அதிசயக்காட்சி, செவ் - செவ்விய, விந்தம் - மலை, விந்தை - இலக்குமி, மின் - மின்னல் போன்ற பொன்னியம்மையார்-

'என்னேஉல கத்தியல்! மின்னனையார்
எழில்மின்னின் மருண்டுளம் ஈர்க்கஇவர்
தந்நேரிலர் நல்லறி வுங்குணமும்
தனியாண்மையும் மன்னவர் சார்வுமுளார்
பொன்னேயனை யாரடி சுட்டதெனுப்
பூவார்துகில் வீசிந டத்துவதே!
இந்நேயமி ருந்தது நன்றிதிலே
இறையும்பிற ஏழைகள் பாலுளதே? 21

கலி விருத்தம்

'ஆற்றலில் மெல்லியர் தம்மை அன்பொடு
போற்றுதல் ஆடவர் இயற்கை போலுமால்;
ஏற்றமில் உயிர்களை ஈந்த ளித்திடும்
மாற்றரும் எந்தையின் அருளை மானுமால். 22

'இப்பெருங் காதலும் இயைந்த வாழ்க்கையும்
இப்பொழு தலர்ந்துள வேனும் பின்புறும்
எய்ப்பினில் உலர்ந்திடில் என்செய் கிற்பரால்
அப்பரத் தணைநெறி அறிகி லாரரோ! 23

---

எவ்வம் - துன்பம், நேர் - நேர்மை, உணரா - உணர்ந்து ('செய்யா' என்னும் வா - வி. எ), இறும்பூது - ஆச்சரியம்.

21. மின் அனையார் - பொன்னியம்மையார், எழில்மின் - அழகொளியில், மருண்டு - மயங்கி, ஈர்க்க - இழுக்க, இவர் - இவ்வுறங்காவில்லியார், தம்நேரிலர் - தமக்கு ஒப்பில்லாதவர், சார்வும் - சார்பும் (துணையும்), பொன் - இலக்குமி, பூ ஆர் துகில் - அழகு பொருந்திய உத்தரியம், வீசி - விரித்து, இறையும் - சிறிதும், ஏழைகள் - அறிவிலிகள்.

22. மெல்லியர் - பெண்டிர், போற்றுதல் - காத்தல், ஏற்றம்-பெருமை, மாற்றரும் - (மாற்ற + அரும்) மறுக்க முடியாத, எந்தை - திருமால், மானும்- ஒக்கும், ஆல் - அசைச்சொல்.

23. அலர்ந்து உளஏனும் - பிரகாசித்திருக்கின்றன எனினும், (ஏனும் - எனினும் என்பதன் மரூஉ), எய்ப்பு - இளைப்பு (மூப்பு), என் செய்கிற்பர் - என்ன செய்வார்கள், அப்பரத்து அணை நெறி - அந்தப் பரமபதத்தை அடையும் மார்க்கம், அரோ - அசைச்சொல்.

'ஒருவரின் ஒருவர்வைத் துடைய காதலின்
ஒருசிறி திருவரும் உலக நாயகன்
திருவடி மிசைவரச் செலுத்தின் வீடெனும்
அருநெறிக் குறுதுணை ஆவ துண்மையே.' 24

வஞ்சித் துறை

இன்னபல எண்ணியிள
அன்னமுடன் அங்கடையும்
மன்னனைய வில்லியரைத்
தன்னருக ழைத்தருளி. 25

'ஏதுபதி? ஏதுதொழில்?
யாதுகுலம் நும்ம?' என,
தீதிலவர் சேவடிகள்
மீதுதொழு தோதுவரால்: 26

'சேர்தல்அறை ஆகும்உறை
யூரில்; அக ளங்கன்அரு
கார்வமிகு காவல்தொழில்
சார்மறவர் சாதியினேன். 27

'மல்லுடைய வாள்உழவர்
செல்லரிய போர்முழுதும்

---

24. வைத்து உடைய - வைத்துள்ள, காதலின் - ஆசையில், உலக நாயகன் - திருமாலின், வீடு எனும் அருநெறிக்கு - பரமபதம் என்னும் செல்ல முடியாத வழிக்கு, உறுதுணை - உற்ற துணை (வினைத்தொகை).

25. இள அன்னம் - இளமையுடைய அன்னம் போன்ற பொன்னியம்மையார்.

26. ஏது பதி - ஊர் எது, நும்ம என - உம்முடையன என்ன (நும்ம - பலவின்பால் படர்க்கைக் குறிப்பு வினையாலணையும் பெயர்), தீதிலவர் - குற்றமில்லாதவர் (இராமானுசர்), ஓதுவர் - சொல்லுவர்.

27. சேர்தல் - வசிப்பது, அறை - திருவெள்ளறை, சார் - (காட்டில்) வசிக்கின்ற, மறவர் - வேடர்களின், சாதியினேன் - சாதிக்குரியவன்.

ஒல்லையடு கின்றதிறல்
வில்லிஎனும் நாமமுளேன்.' 28

என்றிடலும் மாதவரும்
நன்றெனநகைத்தருளி,
'இன்றிவரை ஆளுவது
துன்றுகடன்,' என்றுகவா. 29

குறள் வெண்செந்துறை

'ஆயின்மிக நன்றன்பீர்! இம்மாதர் யாரே?
அறைக,'என, 'அடியேன்தன் அருமனைவி,' என்ன,
'தூயஇவர் செல்வழியில் சீலைவிரித் திட்ட
துணிபியா'தெனவில்லி சொல்லுவர்மற் றம்மா: 30

'நாற்குலத்து மாதரினும் இவளனையாள் காண்மின்;
நம்குலத்தோர் செய்தவத்தால் வந்துபிறந் திட்டாள்;
மேற்குலத்தார்க் கிவள்போலும் ஓர்மனைவி வாய்த்தால்
விடுவாரோ? தெய்வம்என வீழ்ந்துவணங் காரோ? 31

'செம்பஞ்சுத் தூரியமும் தீண்டின்மிக அஞ்சும்
சேவடிகள் இவ்வாற்றுத் தெளிமணலில் பட்டால்
வெம்பஞ்சும்; ஆதலினல் சீரைவிரித் திட்டே
மெல்லஅழைத் தேகுகிறேன்; வியப்பென்ன இதிலே?

---

28. வாள் உழவர் - அரசர், ஒல்லை - விரைவாக, அடுகின்ற - அழிக்கின்ற, திறல் - வெற்றியுடைய, நாமம் உளேன் - பேர் உடையவன்.

29. துன்று கடன் - பொருந்திய கடமை.

30. ஆயின் - ஆனல், துணிபு - கொள்கை, யாது - என்ன, மற்று, அம்மா - அசைகள்.

31. நாற்குலம் - (பிராமண க்ஷத்திரிய வைசிய சூத்திரர் எனும்) நால் வகை வருணம், இவள் அனையாள் - இவளைப்போன்றவள், காண்மின் - பாரும், மேல் குலம் - உயர்ந்த சாதி.

32. செம்பஞ்சு - செம்பஞ்சுக்குழம்பு (முற்காலத்துப் பெண்கள் காலுக்கு அழகு செய்யப் பூசுவது), தூரியம் - எழுதுகோல், வெம்பஞ்சும் -

'வியப்பில்லை; மெல்லியலார் பின்தொடரச் சென்று
வேந்தருழைப் பணிசெய்தல் வேண்டுங்கொல்? வீட்டில்
அயர்ப்பின்றி இவரிருக்க நீர்சென்று வருதல்
அழகன்றோ இல்லாளென் றறைவதனால் ஐயா!' 33

'ஆமதுவும் மெய்யெனினும் என்னுயிர்க்குத் துணையா
அருள்வழங்கும் இவள்விழிகள் அடிக்கடிநோக்குற்றால்
போமயர்வென் உளம்ஊக்கம் எய்தியிளைப் பாறும்;
பொய்யில்லை; உடன்கொண்டு போவதுவும் இதற்கே.'

'இவ்விழிகள் துயர்நீக்கும் என்றீர்; இவ் விழிகள்
என்னாகும் மூத்துநரைத் திட்டபொழு தம்மா!
எவ்வழிச்சென் றுய்குவிரோ! யாவரளிப் பாரோ!
எதுநிலையோ! எதுசெய்தால் இன்பநிலை வருமோ! 35

'சாரும்வரை அறியாது தன்னிழலை அளப்போன்
தன்னிலுறும் முடிவறியா தின்பமெனக் கருதி
நாரியர்தம் விழிநாடி அலைகுவிரோ ஐயா!
ஞானவிழி தரும்பரமன் அருளுணரா தந்தோ! 36

---

(வெம்பு + அஞ்சும்) சுடுதலை அஞ்சுவாள், (அஞ்சும் - செய்யுமென் வாய்பாட்டு வினை முற்று), சீரை - ஆடை, வியப்பு - அதிசயம்.

33. வேந்தர் உழை - அரசரிடத்து, வேண்டுங்கொல் - வேண்டுமோ, அயர்ப்பு - வருத்தம், இல்ஆள் - இல்லத்தை ஆள்பவள் (மனைவி), அறைவதனால் - (பெரியோர்கள்) சொல்வதால்.

34. அருள் வழங்கும் - கிருபை தரும், நோக்குஉற்றால் - பார்த்தால், போம் அயர்வு - (அயர்வு போம்) தளர்வு போகும், ஊக்கம் - உற்சாகம், எய்தி - பெற்று.

35. என்ஆகும் - என்னஆகும், மூத்து - முதிர்ந்து, மூத்து நரைத்திட்டபொழுது என் ஆகும் என இயைக்க, எவ்வழி - எவ்விடத்து, உய்குவிரோ - பிழைப்பீரோ, இன்ப நிலை - அழியா இன்பம்.

36. சாரும் வரை - சேரும் எல்லை, அளப்போன்தன்னில் - அளப்பவனைப்போல, அந்தோ - ஐயோ!

'தேசுபடு வாலிபமும் செல்வமிகு வாழ்வும்
செங்கதிரால் சுட்டவியும் சிறுமணலுக் கொப்பே;
ஈசனருள் விழியழகை ஓர்பொழுது கண்டால்
எஞ்ஞான்றும் அழியாத இன்பநிலை காண்பீர். 37

'நெய்க்குடத்தில் சேர்ந்துறவு கொண்டாடும் எறும்பில்
நேடிவரும் சுற்றமெலாம் ஊடிடுங்காண் முடிவில்;
கைக்குதவும் பொருளழிந்தால் அஞ்ஞான்றும் வந்து
கைகொடுத்துக் காக்கின்ற ஒருவன்தாள் கதியே. 38

'அவ்வொருவன் அருகிருக்கும் அன்னையொரு பெண்ணே;
அவள்விழிகள் இவர்காணில் அந்தமறும் இன்பம்
கைவருமால்; அதுமறக்க முடியாது கண்டீர்;
கண்ணிமைத்து மூடுகினும் காட்சிதரும் ஐயா! 39

'அவளழகும் பேரருளும் அளவிடவொண் ணாவே!
ஆருயிர்கட் கெல்லாமவ் வழகியொரே அன்னை;
அவளருளால் நாமிருந்து வாழ்கின்றோம்; மேலும்
அப்பரமன் திருவழகும் ஆய்ந்தபடி கேளீர்: 40

'மழையனையான்; கடலனையான்; மதமாவும் அனையான்;
மானவரில் வானவரில் வடிவவன்போல் இல்லை;
பிழைசெயினும் பொறுத்தருளே சொரிகின்ற பெம்மான்
பேரசுரர் வாழ்வொழித்த பெருந்தோளன் கண்டீர்.

---

37. தேசு படு - அழகு பொருந்திய, கதிரால் - சூரிய கிரணத்தினால், அவியும் - தணியும், எஞ்ஞான்றும் - எந்நாளும்.

38. நேடி வரும் - தேடி வரும், சுற்றம் - உறவினர், ஊடிடும் - பிணங்கும், ஒருவன் - திருமால்.

39. கைவரும் - கிடைக்கும், இமைத்து மூடுகினும் - இமைகளைப் பொருத்தி மூடினாலும்.

40. அழகி - இலக்குமி, பரமன் - திருமால், ஆய்ந்தபடி - ஆராய்ந்து அறிந்தவாறு.

41. மழை - மேகம், மதமா - மதம்பொழியும்யானை, மானவர் - மனிதர், வானவர் - தேவர், வடிவு - உருவம், ஒழித்த - தொலைத்த.

'சங்கொருகை ; கூர்வாய்கொள் சக்கரமும் ஒருகை ;
தன்மக்கட் கஞ்சலெனச் சாற்றுவதும் ஒருகை ;
' இங்குவம்மின்,' என்றளிக்கும் மற்றொருகை உடையான்
ஈசரெனப் படுகின்ற எல்லார்க்கும் ஈசன். 42

' வாராதே வரவல்லான் ; அருளாதே அருள்வான் ;
மாற்றமிலாப் பேரின்ப வாழ்வுமவன் கண்டீர் ;
பேராளன் அப்பெருமான் தன்னுருவம் கண்டால்
பிறகாணேம் ; அதுவன்றிப் பேறுமிலை கண்டீர். 43

' இருவீரும் அவ்விருவர் எழில்கண்டு கொண்மின் ;
ஏதமறத் தெளிவெய்திப் போதநிலை சேர்மின் ;
இருவீரும் ஒருவீராய் என்றுமியைந் திருமின்,'
என்றருளி இளையாழ்வார் எய்ப்பறுத்த பொழுதே. 44

ஒன்பதின்சீர் விருத்தம்

நாடி நன்ற டைந்தநிதி தான்பொ திந்தி டமறந்து
நாள்க ழிந்தொ ழிந்ததொருநாள் ;
கூடு கின்ற சிந்தைமிசை யேயெ ழுந்து ணர்ந்துகையில்
கூடி ஒன்று கின்றவதுபோல்
தேடி வந்து ளந்தெளிய மால்தி றங்க ளிந்துரைசெய்
தேசி கன்ப தம்பணிந்தெழா,
'நாடி இன்றென் நஞ்சுவினை வீடி உய்ந்தென்!' என்றவுரை
நாகு ழன்று கொண்டுநவிலா. 45

---

42. அஞ்சல் என - அஞ்சாதீர் என்று, சாற்றுவதும் - சொல்வதும் (அருள்வதும்), வம்மின் - வாருங்கள்.

44. இருவீரும் - (நீவிர்) இருவரும், அவ்விருவர் - (திருமால் இலக்குமி என்னும்) அந்த இருவரின், தெளிவு எய்தி - உணர்ந்து, போதநிலை - அறிவு நின்ற இடம், ஒருவீராய் - விட்டுப் பிரியாதவராய், இளையாழ்வார் - உடையவர், எய்ப்பு - வருத்தம்.

45. நாடி - (வருந்தித்) தேடி, நிதி - திரவியம், பொதிந்திடம் - (பொதிந்த இடம்) பத்திரப்படுத்திய இடம், சிந்தைமிசை - மனத்தில், ஒன்று

சீதம் உந்த உந்துகுளி ரால்ந டுங்கு கின்றமகன்
தீநெ ருங்கு பண்பில்அ றிவோன்
பாத பங்க யங்கள்செ லும் ஆறு சென்று முன்செய்வினைப்
பார முங்கு றைந்தகலவே
வேத மும்செ ழுந்துளவும் நீடு கங்கை யும்குருகை
வேந்தன் அஞ்சொ லும்இடையறாச்
சீத ரன்ப தங்களெதி ராசர் முன்பு வந்தருளச்
சேவை யும்பு ரிந்துணர்வுறா. 46

அறுசீர் விருத்தம்

சித்திரையுற் சவம்கண்டு பொன்னிநடு
எழுந்தருளும் திருமால் சேவை
மெத்தவுளம் களிகூரக் கொண்டெதிரா
சக்குரவர் விரும்பி ஈந்த
முத்திரையும் தனிஞான முதல்மறையும்
பயின்றடியார் மொய்த்த பாங்கர்ப்
பத்திமிகும் பணிபுரிந்து மன்னன் அறப்
பணிதானும் பயிலு கின்றார். 47

---

கின்ற - அடைகின்ற, மால் திறம் - திருமாலின் பெருமையை, கனிந்து - கருணை மிகுந்து, உரைசெய் - சொல்லிய, தேசிகன் - இராமானுசர், எழா - எழுந்து, நஞ்சு வினை - விடம் போலும் கொடிய வினை, வீடி - அழிந்து, உய்ந் தென் - (உய்ந்தேன்) பிழைத்தேன், குழன்று - குழறி, நவிலா - சொல்லி.

46. சீதம் - குளிர்ச்சி, உந்த - தள்ள, பண்பில் - தன்மைபோல, அறி வோன் - உடையவர், பாத பங்கயங்கள் - அடிகளாகிய தாமரைகள் (உருவ கம்), ஆறு - வழி, வினைப்பாரம் - பாவச் சுமை, அகல - நீங்க, துளவும் - துளசியும், குருகை வேந்தன் - நம்மாழ்வார், அம் - அழகிய, சொலும் - திரு வாய் மொழியும், இடை அறா - நீங்காத, எதிராசர் - உடையவர், உணர்வு - ஞானம், உறா - உற்று ('செய்யா' - எ-வா - வி - எ.)

47. பொன்னி-காவிரி, மெத்த - மிக, களிகூர - மகிழ்ச்சி மிக, குரவர்- குரு (உடையவர்), முத்திரையும்- 'சக்கரப் பொறி' என்னும் அடையாளமும், முதல் மறையும் - திருமந்திரமும், மொய்த்த - சூழ்ந்த, பாங்கர் - இடத்தில்,

எண்சீர் விருத்தம்

சீர்மாறிப் பலபிறப்பும் பிறந்தும் செத்தும்
திரிகின்ற இயல்மாறித் திருமால் செங்கை
கூர்மாறில் சக்கரத்தின் பொறிகள் ஒற்றிக்
கொண்டபினர்க் குலமாறிக் குணமும் மாறிப்
பேர்மாறிச் செயல்மாறிப் பேச்சும் மாறிப்
பிறதேவர் உருவணங்கும் பெற்றி மாறி
ஊர்மாறிக் கோயிலிலே குடிகொண் டுற்றும்
உவந்தரசன் பணிமாறு துறைற்று கின்றார். 48

'உறவுகலந் துண்கின்ற காக்கைச் சாதி
உடையவர்நம் தமிழ்நாட்டார்; ஆத லாலே
பெறஅரிய மால்பேறு பெறுக,' என்று
பெரிதுவந்து தம்மருகர் இருவர்க் கீந்தும்
அறநிலைகொள் அகளங்கன் தன்னை ஈர்த்தவ்
வாரியர்பால் அடைவித்தும் அயர்வு நீக்கி
மறுவில்மனை யாருடனே எதிரா சர்க்கு
வண்பணிசெய் தொருவாது வாழும் நாளில்: 49

தரவு கொச்சகம்

வேதம் தமிழ்செய்த வித்தகன்தன் உட்கிடையைப்
போதம் தளிர்க்கப் புகலும்இளை யாழ்வாருக்

---

பணி - தொண்டு, அறப்பணி - தருமம் காக்கும் அரசனுக்குரிய தொழில், பயிலுகின்றார் - செய்கின்றார்.

48. சீர் மாறி - சிறப்பழிந்து, கூர் மாறு இல் - கூர்மை மாறாத, பிற தேவர் - மற்றத் தேவர்களின், பெற்றி - தன்மை, கோயில் - திருவரங்கம், உஞற்றுகின்றார் - செய்கின்றார்.

49. மால் - திருமால், பேறு - செல்வம், மருகர் - மைத்துனர், ஆரியர் - குரு, அயர்வு - துன்பம், மறு இல் - குற்றமில்லாத, ஒருவாது - பிரியாது.

50. வேதம் தமிழ் செய் - வேதத்தைத் தமிழாற் செய்த, வித்தகன் -

கேதம் தவிர இயல்பால் பெருமூப்பும்
ஆதங்கம் இன்றி அடைந்துளதால் அக்காலை. 50

பிஞ்சிலே உள்ளம் பெரும்பழமாய்ப் போனபிரான்
அஞ்சுவரோ மூப்பிற் கருநடையிட் டோர்நாளும்
எஞ்சிடா தொல்லை இரவியெழும் முன்னெழீஇ
விஞ்சடியார் சூழ விரைகா விரிசெல்வார். 51

கூரத்தாழ் வானும் கொள்முதலி யாண்டானும்
சாரத்தாம் சென்று தனித்துறையில் நீராடிப்
பேரத் திரும்பி இருவர் கரம்பெய்த
ஈரத் துகில்மேல் எழில்கரம்வைத் தேகுவார். 52

ஆங்கொருநாள் சார்ந்த அன்பர்உறங் காவிலியார்
தேங்குபுனல் ஆடித் திரும்பும் பொழுதிறைஞ்ச,
'ஈங்கு வருகெ'ன் றெழில்தோள் மிசைச்சாய்ந்து
நீங்கரிய அன்பால் நெடிது செலுகின்றார். 53

ஆழ்வானும் அம்முதலி யாண்டானும் தம்மில்தாம்
சூழ்வார்:'இஃ தென்னே துரிசிலா நம்குரவர்

---

நம்மாழ்வார், உட்கிடையை - மனக் கருத்தை, தளிர்க்க - வளர, ஆதங்கம் - வருத்தம், அக்காலை - அந்நாளில்.

51. பிஞ்சிலே - இளமையிலே, பழமாய்ப் போன - பழுத்த (ஞானம் முதிர்ந்த), அருநடை இட்டு - மெள்ள நடந்து, எஞ்சிடாது - தவறாமல், இரவி எழுமுன் - சூரியன் உதிக்கும் முன், எழீஇ - எழுந்து, விஞ்சு - (அன்பு) மிக்க, விரை - வாசனை உடைய.

52. சார - அடைய, பேர - மீள ('பெயர' என்பதன் மரூஉ), இருவர் - (கூரத்தாழ்வான், முதலியாண்டான் என்னும்) இருவரும், பெய்த - இட்ட, ஏகுவார் - போவார்.

53. தேங்கு - நிறைந்த, புனல் - நீரில், ஆடி - முழுகி, இறைஞ்ச - வணங்க, வருகென்று - வருக என்று, நெடிது - நன்றாய்.

54. ஆழ்வானும் - கூரத்தாழ்வானும், சூழ்வார் - ஆலோசிப்பார், துரிசு இலா - குற்றம் இல்லாத, தாழ்வு ஆர் - இழிவு மிக்க, புயம் தழீஇ - தோளைத் தழுவி.

தாழ்வார் குலத்தோர் வில்லி புயம்தழீஇ
வாழ்வான தீந்தார் ! வகையீ தறியேமால் !' 54

என்று கருதும் இவருட் கிடைஅறிந்தே
அன்று புகல்வார் அறிவர்: ' அருமறையீர் !
நன்று குலமே நமதென் றியல் செருக்கின்
நின்ற வலிய நினைவும் அழியாதால். 55

'கீழைப் பிறப்பில் கிடந்தேன் எனஅஞ்சித்
தாழப் படுமால் இவருள் தகுதியதால் ;
ஏழைக் குரிமை உடைய இறைவனுல்
ஆளப் படுவார் இவரே கடிதம்மா ! 56

'தொண்டக் குலத்தில் குலம்புகலத் துணிவில்லை ;
அண்டக் குலத்தின் அவரும் நிகராரால் ;
பண்டைப் பிறவி திகிரி பதித்தன்றே
இண்டப் புலையோ டிரிந்து மறைந்ததால்.' 57

என்னப் புகல இருவரும் உள்ளஞ்சி,
'மன்னிக்க !' என்று மலர்த்தாள் மிசைவீழ்ந்தார் ;

---

55. அறிவர் - ஞானியார் (உடையவர்), புகல்வார் - சொல்வார், அருமறையீர் - அரிய வேதம் உணர்ந்தவர்களே, நன்று குலமே நமது - (நமது குலம் நன்றே) நம் சாதி உயர்வுடையதேயாம், இயல் - உண்டாகும், செருக்கில் - அகங்காரத்தினல், வலிய - வன்மை உடைய, நினைவும் - நினைப்பும்.

56. கீழைப் பிறப்பில் - தாழ்ந்த பிறப்பில், கிடந்தேன் - பிறந்து கிடந்தேன், தாழப்படும் - அடங்கி இருக்கும், உரிமை - சொந்தம், ஆளப்படுவார் - ஆட்கொள்ளப்படுகிறவர், கடிது - விரைவாய், அம்மா - வியப்பு இடைச்சொல்.

57. தொண்டக் குலம் - திருமாலடியார் கூட்டம், துணிவு - நூல் கொள்கை, அண்டக் குலம் - தேவ சாதி, நிகரார் - ஒப்பாகார், பண்டைப் பிறவி - (இவருடைய) முன்னைய வேடர் பிறப்பு, திகிரி - சக்கரக் குறி, பதித்தன்றே - (பதித்த + அன்றே) ஒற்றிய போதே, இண்டப்புலை - சண்டாளத் தன்மையாகிய கீழ்மை, இரிந்து - ஓடி.

பின்னப் படாவாய்மைப் பேரருளார் தம்மனத்துள்
உன்னற் கரிய பிறிதோர் செயலுன்னு. 58

பத்தர் குழாத்தில் பெரிதும் பரிவுடைய
முத்தரே ஆக முயல்வார் உளமறிதற்
கொத்த தருணம் உணர்ந்தங் கொருநாளில்
வித்தர் இரவின் விரைவின் விழித்தெழுந்து. 59

நாளை உடுத்த உரிய நலமுடைய
சீலை சிலவற்றைச் சிறிது கிழித்தெடா
மூலப் படுத்தி முனிராசர் போந்திடலும்
காலைநீர் ஆடிக் கடிதின் உடைதேர்வார். 60

பல்லார்தம் பைந்துகிலும் பப்பாதி ஈர்ந்திட்ட
பொல்லாக் களவை அறிந்து புலம்பினர்,
'மல்லா ! திருடா ! மதிகேடா ! யாவனே
இல்லாக் கொடுமை இழைத்தாய்;' எனவைவார். 61

'தூய குருகுலத்தில் துணிந்து களவாடற்
காய கரவர்இலை அருமா நெறியுடையீர் !

---

58. பின்னப்படா - பழுது படாத, வாய்மை - உண்மை, உன்னற்கு அரிய - நினைத்தற்கரிய, பிறிது ஓர் செயல் - வேறு ஒரு செய்கையை, உன்னு - நினைத்து.

59. குழாத்தில் - கூட்டத்தில், பெரிதும் - மிகவும், பரிவு - அன்பு, முத்தர் - ஞானியர், முயல்வார் - தொடங்குகின்றவரின், உளம் - மனப்பான்மையை, ஒத்த - ஒப்பான, வித்தர் - ஞானியார் (உடையவர்), விரைவின் - சீக்கிரத்தில்.

60. உடுத்த - உடுத்துவதற்கு, கிழித்து எடா - கிழித்தெடுத்து, மூலப் படுத்தி - பத்திரப்படுத்திவிட்டு, முனிராசர் - யதிராசர், கடிதின் - விரைவாக, உடை தேர்வார் - ஆடைகளைத் தேடினர்.

61. பைந்துகிலும் - பசிய ஆடைகளையும், பப்பாதி - பாதி பாதி, ஈர்ந்திட்ட - அறுத்த (கிழித்த), மல்லா - முரடா, இழைத்தாய் - செய்தாய், வைவார் - நிந்திப்பார்.

மாயம் உணரின் வறிஞர் புரிந்துளரோ!
போய திறைவன் அடியார்க்குப் போலுமால். 62

'பாகவதர்க் கீந்த பரிசின் உளமகிழ்ந்து
சோகம்அகல் 'கென்று துரிசிலார் சொல்லுகினும்
வேக மகல்கில்லார் விசையா வசைபாடி
மோகமனம் ஏய்ந்த முருடர் இருந்திட்டார். 63

அறுசீர் விருத்தம்

அன்பர்பணி புரிவாரில் புறச்சுவர்க்கே
கோலமிடும் அவர்கட் குண்மை
அன்பர்தம துடல்பொருளும் ஆவியுமீந்
திடவல்ல அன்பு காட்டற்
கின்பநினை வுறுகுரவர் ஓர்நாளில்
தம்மடியார் இருவர் தம்மை
மன்பரிவி னுடனழைத்து மறையாக
ஒருவாய்மை வழங்கு கின்றார்: 64

'நம்மடத்துப் பணிபுரிய வேண்டுபொருள்
இலதாக நாடின் இன்று

---

62. குருகுலம் - குருவின் இடம், களவாடற்கு ஆய - களவு செய்வதற்குரிய, கரவர் - வஞ்சகர், இலை - இல்லை, அருமா நெறி - அரிய (வைணவப்) பெருநெறி, நெறி - மார்க்கம், வறிஞர் - தரித்திரர், போயது - (உங்கள் ஆடைகள்) போயினது.

63. ஈந்த பரிசின் - கொடுத்த தன்மையாக, பரிசு - தன்மை, சோகம் - துக்கம், அகல்கென்று - (அகல்க + என்று) நீங்குக என்று, வேகம் - கோபம், விசையா - ஆத்திரப்பட்டு ('செய்யா' எ. வா. வி. எ), வசை பாடி - நிந்தை பேசி, மோகம் - அஞ்ஞானம், ஏய்ந்த - பொருந்திய, முருடர் - இதம் அறியாத மாணவர்.

64. புரிவாரில் - செய்வாரைப் போல, புறச்சுவர்க்கே கோலம் இடும் அவர்கட்கு - (உள் சுவர் அழிந்து கிடக்க) வெளிச்சுவரையே அழகுபடுத்து வாரைப் போல (அகத்தே தீய குணங்கள் குடியிருக்கவும் புறத்தே நற்குணம் உடையவர்களைப் போல நடிக்கும்) அவர்களுக்கு, மன் - நிலைத்த, பரிவினுடன் - அன்புடன், மறையாக - இரகசியமாக, வழங்குகின்றார் - சொல்லுகிறார்.

செம்மனத்தர் அறக்கொடையர் ஈவாரைக்
காண்கிலமால்; சிந்தை கொண்மின் :
விம்மலிது ஒழித்திடற்கு வகையெண்ணின்
வேந்தனைய வில்லி யார்தம்
நன்மனையின் அருந்ததிநேர் பொன்னாச்சி
யார்துயிலை நாடி ஏகி. 65

'தொண்டர்தமக் காவனவாம்; தோடமிலை;
அவர்மெய்யில் சோதி வீசும்
வெண்டரள வடமுதலாம் பணியுளவால்;
அவைகவர்ந்து விரைந்து வம்மின் ;
பண்டையுள ஆழ்வாரில் திருவாலி
வளநாடர் பணியும் தேர்வேம் ;
எண்டகைமை இதுபிறருக் கறிவியா
தியற்று'கென ஏவி னரால். 66

அத்தரருள் தலையேந்தி அவ்வன்பர்
நள்ளிரவில் அரசர் இல்லே
ஒத்துளஇல் லுட்புகுதாப் பொன்னாச்சி
யார்துயிலும் ஓர்ந்து தங்கள்

---

65. நாடின் - ஆராய்ந்தால், செம்மனத்தர் - நன்மனம் உடையவர், அறக்கொடையர் - தருமக் கொடையுடையவரான, ஈவாரை - தருகின்ற வள்ளலரை, விம்மல் - துன்பம், வேந்து - அரசர், துயிலை நாடி - தூங்கும் சமயத்தை அறிந்து.

66. ஆவன ஆம் - உபயோகப்படுவனவாகும், தோடம் - (தோஷம்) குற்றம், மெய்யில் - உடம்பில், தரளவடம் - முத்து மாலை, பணி - ஆபரணம், திரு ஆலி வள நாடர் - திருமங்கை மன்னர், தேர்வேம் - அறிவோம், எண் தகைமை - எண்ணுந்தன்மை, ஏவினர் - அனுப்பினர்.

67. அத்தர் - குரு (உடையவர்), நள் இரவில் - நடு இரவில், இல் உள் புகுதா - வீட்டின் உள் புகுந்து, ஓர்ந்து - அறிந்து, விதிர் விதிர்க்க - நடு நடுங்க, உத்தமியார் - பொன்னாச்சியார், துயில் - தூக்கம், உணரா - தெளிந்து ('செய்யா' எ. வா. வி. எ.), உன்னுகின்றார் - நினைக்கின்றார்.

கைத்தலங்கள் விதிர்விதிர்க்க ஒருபாதி
உடலணிகள் கழற்றும் காலை
உத்தமியார் துயிலுணராக் கரவுணர்ந்து
மதிதேறி உன்னு கின்றார் : 67

குறள் வெண்செந்துறை

'அந்தோ!இங் கிவர்யாரே! தீயதென அறியா
தம்மஇது புரிகின்றார்! செம்மனத்தர் தாமோ!
நந்தாதின் புறுதொழில்தான் ஒன்றின்றி வாடி
நண்ணுகிளைக் குணவீய எண்ணினர்கொல் அன்றேல். 68

'எவ்வுயிரும் காத்தளிக்கும் இறையருளாம் எல்லைக்
கிப்புறத்தே நின்றாரோ! ஒப்பில்வினை தன்னால்
எவ்வுயிர்கள் இவர்சரணாய் ஏங்கியெதிர் நோக்கி
என்பெழுந்த உடலோடும் துன்பழுந்துங் கொல்லோ! 69

'தம்முயிர்க்கு வருங்கேடு தாமறிவா ரேனும்
சார்பசியால் துணிவெய்திச் சார்ந்துளரால் அம்மா!
விம்முளத்துள் அச்சமுண்டு கைசலித்துக் காட்டும்
விழித்தாலும் விதிர்த்தழிவர் ; என்புரிவாம் மேலும்! 70

'ஒருபுறத்துப் பணியிவர்தம் பசிப்பிணிக்குப் போதா ;
ஒஞ்சரிக்கின் மறுபுறமும் உற்றபணி கொள்வார் ;
இருபுறமும் கொள்ளஇவர் எந்நாளும் வாழ்தற்
கேலும்,'என அசைந்திட்டார் ; ஈண்டியவர் அஞ்சி. 71

---

68. நந்தாத இன்பு உறு தொழில் - கெடாத இன்பம் தரும் வேலை, கிளைக்கு - உறவினர்க்கு.

69. இறை - திருமால், இவர் சரணாய் - இவர்களைக் கதியாய், என்பு எழுந்த - எலும்பு தோன்றிய, துன்பு அழுந்தும் - தரித்திரத்தில் மூழ்கும்.

70. கேடு - கேட்டினை, விம்மு உளத்தில் - வருந்துகின்ற மனத்தில், சலித்து - அசைந்து, விதிர்த்து அழிவர் - அஞ்சி ஓடிவிடுவர்.

71. ஒஞ்சரிக்கின் - ஒரு புறம் திரும்பினல், ஏலும் - பொருந்தும், ஈண்டியவர் - அணுகியவர்.

காற்றின்விரைந் தேகுதலும் காரிகையார் வெருவாக்
'கழிபேதை மதியுடையேன் அழிவறுமை யாளர்க்
கேற்றபொருள் வாய்ப்பதற்கும் கூடாமை செய்தேன்!'
என்றுமனம் புண்கொள்ளத் துன்று துயர் ஆழ்ந்தார். 72

அறுசீர் விருத்தம்

பொன்னியார் பால்க வர்ந்த பொன்னணி வாங்கி ஐயர்
மன்னுறப் பொதிந்த பின்னர் மனிதரில் திலகம் என்ன
உன்னலாம் உறங்கா வில்லி தாசர்அம் மாதர் ஓத
முன்னிர விடையில் நேர்ந்த களவினை முன்னிக் கேட்டார். 73

'வந்தவர் யாவ ரேனும் வறிஞரென் றிரங்கி னையேல்
சிந்தனை நன்றால்; பின்னர்ச் செய்தது தீது கண்டாய்;
புந்தியில் மகளிர் செய்கை புரிந்தனை போலாம் பொன்னி!
நிந்தனை இதன்மேல் உண்டோ வறிஞர் தம் நினைவு கொன்றால்? 74

'சற்றுநீ அசைந்தி டாயேல் தரித்துள அனைத்தும் கொண்டு
பெற்றதம் மக்கட் கெல்லாம் பெரும்பசி தணிப்பர் அன்றே?
கற்றனை யேனும் ஆகாய்; உலகத்தின் சேவை கல்லாப்
பொற்றொடீ! உனைக்கொண் டன்றே பணிசெயப் புகுவதம்மா! 75

'தலைவனை முந்திச் சென்று தகும்பணி இயற்ற வல்லாய்
நலைபென மகிழ்ந்தேம்; இற்றை ஞான்றுநின் வேடம் தேர்ந்தேம்;

---

**72.** காற்றின் - காற்றைப்போல, காரிகையார் - பொன்னாச்சியார், வெருவா - அஞ்சி ('செய்யா' எ.வா.வி.எ.), கழி - மிகுந்த, அழி - வருந்துகிற, கூடாமை - மாட்டாமை, துன்று - நிறைந்த.

**73.** ஐயர் - உடையவர், பால் - இடம், மன்னுற - பத்திரமாக, இரவு இடையில் - நடு இரவில், நேர்ந்த - நிகழ்ந்த, முன்னி - கருதி.

**74.** புந்தி இல் - அறிவில்லாத, நினைவு கொன்றால் - விருப்பத்தை அழித்தால்.

**75.** கற்றனை ஏனும் - திருமால் பத்தியை அறிந்திருக்கின்றாய் எனினும், ஆகாய் - வைணவ நெறிக்குப் பயன்படாய், உலகத்தின் சேவை - உயிர்களுக்குச் செய்யும் தொண்டு (உலகம் இடவாகு பெயராய் உயிர்களை உணர்த்திற்று), கல்லா - அறியாத.

அலையலை ; அன்பர் கூட்டத் தணுகவும் அல்லை,' என்று
சிலையுடை உறங்காத் தாசர் செப்பிய மாற்றம் கேளா. 76

அன்னையே அனைய பொன்னார் ஆருயிர் அழிந்து வெம்பி,
'என்னையே என்னை யேயெம் இறைவனார் இசைத்த ?' தென்னா
மின்னையே படிக்கண் வீழ்ந்து விட்டதென் றுயங்கி வீழ்ந்து
முன்னியே நைந்தார் மற்றம் முதல்வரும் தணியார் ஆகி.77

'தன்னுடைத் தாசத் தன்மை தவிர்ந்துதன் வயத்து நின்றாள்
மின்னுடைத் திகிரி அண்ணல் மெய்ப்பணிக் காகாள்,' என்று
மன்னுடைத் தொழிலும் நீத்து மாதவன் அடிகள் உன்னிக்
கொன்னுறு பசியும் ஓரார் இருந்தனர் கோட்டம் இன்றி. 78

இவ்வணம் மூன்று நாளும் ஏகிட எதிரா சர்க்கங்
கவ்வணம் அறிந்தோர் கூற அழைத்திரு வரையும் நோக்கிச்
'செவ்வணத் தியைந்த வாழ்வில் தேவரை அனையீர் ! ஊடல்
எவ்வணம் நிகழ்ந்த ?' தன்ன, வில்லியார் இதனைச் சொன்னார். 79

---

76. தலைவனை - கணவனை, தகும் - தக்க, இயற்ற வல்லாய் - செய்யக்கூடியவள், நலை - (நல்லை) நல்லவள், இற்றை ஞான்று - இந்நாள், அலை அலை - (அல்லை அல்லை) நீ தகாதவள் தகாதவள், சிலை-வில், செப்பிய - சொல்லிய, மாற்றம் - மொழிகளை, கேளா - கேட்டு ('செய்யா' எ.வா.வி.எ.)

77. என்னையே என்னையே - யாதோ யாதோ, எம் இறைவனார் - எம் கணவனார், இசைத்தது - சொல்லியது, மின்னை - மின்னல், ஐ - சாரியை, ஏ - அசை, படிக்கண் - பூமியில், உயங்கி - வருந்தி, முன்னி - நினைத்து, தணியார் ஆகி - (கோபம்) ஆறுதவராய்.

78. தாசத் தன்மை - அடிமைத் தன்மை, தன் வயத்து - சுதந்திரத்தில், மின் - ஒளி, மன்னுடைத் தொழில் - அரசனுக்குரிய பணி, கொன் உறு - அச்சம் பொருந்திய, கோட்டம் இன்றி - மாறுபாடில்லாமல்.

79. இவ்வணம் - (இவ்வண்ணம்) இவ்வாறு, செவ்வணத்து - சிறந்த தன்மையில், இயைந்த வாழ்வில் - பொருந்திய வாழ்வினால், தேவரை அனையீர் - (அழியா வாழ்வுடைய) தேவர்களைப் போல்பவரே, ஊடல் - பிணக்கு, எவ்வணம் - எவ்வாறு, நிகழ்ந்தது - சம்பவித்தது.

'எம்பிரான் பணிகள் ஆற்ற இகலுடைக் கலியன் எந்தை
வம்பினல் புரிந்த வாறே வறிஞரோ அடியார்க் கென்றும்
அன்பினல் பணிகள் ஆற்றக் கருதியோ அணிகள் கொள்வான்
வன்பினல் அடைந்தார்; இந்த மாதரால் மடங்கி னரால். 80

'தீயெலாம் சுடுவ தொப்ப வறுமையில் தீய்கின் றாரை
ஆயலாங் கொல்லோ ஐய! அசைந்தனள்; அஞ்சிச் சென்றார்;
நோயெலாம் நுழைந்த தேபோல் நுடங்குமென் உள்ளம் செப்பின்
வாயெலாம் தீயும் அன்றே? பொருந்துமோ இவள் தன் வாழ்க்கை?

'திருவிலாச் சீவர்க் கன்றே திருவினர் தலைவன் நம்பால்
வருபொருள் உய்த்த தேற்றம்? மற்றிது சிந்தி யாதாள்
உருவினல் பெண்மை யேனும் உளத்தினல் வன்மை யாளை
ஒருவினல் அன்றி உய்யேன்!' எனவுளம் உருகிச் சொன்னர். 82

'விதித்தசீர் வைண வத்தின் விதிமறுத் திட்ட போதே
துதித்திடத் தக்கா ளேனும் உரியளோ துணியின்? மற்றை
நிதிப்படு பொன்னின் இந்த நிறையுடைப் பொன்னி தன்னை
மதித்துயர் தானம் ஈவான் மதித்தனம் என்கொல் உள்ளம்!'

ஆண்டருள் ஐயர் இவ்வா றருளலும் விலியார், 'ஐய!
வேண்டுவ செய்க,' என்ன, மிகையறு முனிவர், 'அஃதேல்

---

80. இகல் உடை - வலியுடைய, கலியன் - திருமங்கையாழ்வார், வம்பினல் - புதுமையாக, வன்பினல் - துணிவினல், மடங்கினர் - திரும்பினர்.

81. தீய்கின்றாரை - வேகின்றவர்களை (வருந்துபவர்களை), ஆயலாம் கொல்லோ - ஆராய்வது சரியோ, நுடங்கும் - வருந்தும், தீயும் - வேகும்.

82. திரு இலா - பொருள் இல்லாத, திருவினர் - இலக்குமியின், தலைவன் - கணவன் (திருமால்), நம்பால் - நம்மிடத்து, வரு பொருள் - (நல்வினையால்) வரும் செல்வத்தை, உய்த்த - அளித்த, தேற்றம் - உண்மை, உருவினல் - உடம்பினல், வன்மையாளை - இரக்கமில்லாதவளை, ஒருவினல் அன்றி - பிரிந்தாலன்றி.

83. விதித்த - (இறைவன்) வகுத்த, விதி - ஒழுக்கத்தை, துணியின் - ஆராய்ந்தால், நிதிப்படு - சேமிக்கத் தகுந்த, பொன்னின் - செல்வம் ஒப்ப, நிறை - கற்பு, மதித்து - கருதி, மதித்தனம் - எண்ணினேம்.

ஈண்டுளார் தம்மில் இந்த ஏந்திழைக் கேற்ற தெய்வம்
நீண்டுயர் வில்லி யே;நாம் ஈத்தனம்; நேர்க,' என்றார். 84

அம்மொழி கேட்ட தாசர், 'ஆரியர் பணியீ தெ'ன்னச்
செம்மொழி பயின்று மாதர் திருக்கரம் பற்றி நின்றார் ;
விம்முறும் அடியர் சிந்தை வியந்துபே ருவகை பொங்கத்
தம்மிலத் துணைவர் சீர்மை தனித்தனி துதிக்க லுற்றார். 85

' கற்றபோ துயிர்களெல்லாம் கருமுகில் வண்ணன் என்பீர்;
உற்றபோ தொருவர் சோற்றை ஒருவருக் குதவ மாட்டீர் ;
பெற்றபே றிதுவே போலாம்! வைணவப் பெருமை நோக்கின்
மற்றுமோர் நீதி உண்டோ மன்னுயிர்க் கிரங்கல் அல்லால்?

' அன்றுசில் அன்பர் சீரை அழித்தவர் யாமே காணீர் ;
ஒன்றுமுள் கருணை இன்றி வைதலை ஒழியார் அம்மா !
இன்றிவர் அன்பு காண்மின்! எரிகதிர்ப் பணிகள் எல்லாம்
துன்றஇக் களவு செய்வான் தூண்டினம் யாமே அன்பீர் !

குறள் வெண்செந்துறை

' கனிந்துசிவந் தொளிவீசும் காஞ்சிரங்காய் அனையீர் !
கடுமுட்கள் நிறைந்தபலாக் கனியனையர் இவரைப்
பணிந்தொழுகின் உம்கரிசு பறந்தோடும் கண்டீர் ;
பாகவதப் பரிசெல்லாம் பயின்றிடுதல் எளிதே. 88

---

84. ஐயர் - குரு, அருளலும் - சொல்லலும், மிகையறு - குற்றமற்ற, முனிவர் - உடையவர், அஃதேல் - அப்படியானால், ஏந்திழைக்கு - பொன்னாச்சியாருக்கு, ஈந்தனம் - கொடுத்தோம், நேர்க - உடன்படுக.

85. ஆரியர் - குரு, பயின்று - பேசி, விம்முறும் - கவலையுற்றிருந்த, பேருவகை - பெருமகிழ்ச்சி, சீர்மை - சிறப்பை.

86. கருமுகில் வண்ணன் - திருமால், உற்ற போது - நேர்ந்த போது பேறு - பயன், நோக்கின் - ஆராய்ந்தால், மன்னுயிர்க்கு இரங்கல் - உயிர்களிடத்துக் கருணை காட்டுதல்.

87. சில் - சில, சீரை - ஆடைகளை, அழித்தவர் - அறுத்தவர், வைதலை ஒழியார் - நிந்திப்பதை விடார், துன்ற - பொருந்த.

88. காஞ்சிரங்காய் - எட்டிக்காய், கரிசு - குற்றம், பரிசு - தன்மை.

'இவருடலைத் தீண்டினமென் றியையாத எண்ணி
இருந்தீர்;இவ் வுடல்நமது பெரும்பரிச வேதி ;
தவறிலை,'என் றெழுந்தன்பு தழைக்களதிர் நின்ற
தாசர்தமைத் தழுவினரால் ஈசர்எதி ராசர். 89

'கமைவேண்டும்; தாழ்குலத்து மாந்தருழைச் சென்று
கனிந்தபணி தவறாது துணிந்துசெயல் வேண்டும் ;
எமைவேண்டும் பத்தரெலாம் இவர்போன்று நாளும்
எவ்வுயிர்க்கும் தாழ்ந்தனமென் றெண்ணியிடல் வேண்டும்.'

அறுசீர் விருத்தம்

என்பன ஆதி ஆக இயல்மறை அனைய நீதி
அன்றவர்க் கருளிச் சீயர் இருந்தனர் ; ஆண்டு பல்ல
சென்றபின் அரங்கம் மேவும் திருமகள் கொழுநன் ஓர்நாள்
நன்றெதி ராசர் தம்மை 'நம்முழை வருக,' என்றான். 91

'செய்வன யாவும் செய்து தீர்ந்தனம் ; தேவர் ஏத்தும்
மெய்யுடை நாடு செல்வான் விரும்பினம்,' என்ற போதே
'உய்வதிங் கெவனோ !' என்று மறுகுவார்க் குறுதி ஈந்து,
நைவிலார் முடிவி லாத நாட்டர சடைந்திட் டாரால். 92

---

89. இயையாத - பொருந்தாத, பரிச வேதி - இரும்பைப் பொன்னாக்கும் ஒரு மருந்து, ஈசர் - குரு நாதர்.

90. கமை - பொறுமை, மாந்தருழை - மனிதரிடம், எமை - எம்மை, வேண்டும் - விரும்பும், பத்தர் - அன்பர்.

91. இயல் மறை அனைய - தகுந்த வேதங்கள் போன்ற, சீயர் - உடையவர், நம் உழை - நம்மிடத்திற்கு.

92. மெய்யுடை நாடு - பரம பதம், செல்வான் - செல்வதற்கு, உய்வது - பிழைப்பது, எவனோ - எவ்வாறோ, மறுகுவார்க்கு - புலம்பும் அன்பருக்கு, உறுதி ஈந்து - உண்மையை அருளி, நைவிலார் - வருத்தமில்லாதவராய், முடிவிலாத - அழிவில்லாத, நாட்டு அரசு - பரம பதத்திலும் (அன்பர்கள் பணிய இருக்கும்) தலைமை.

நீரிடை வாழு மேனும் நிலத்தினும் பிழைக்க வல்ல
கூருமம் அன்னார் பல்லோர் கொடுந்துயர் ஆறி உற்றார் ;
நீருள தனையும் நின்று நிலைகெடும் கமலம் அன்ன
சீருடை உறங்காத் தாசர் சிந்தையுள் அயர்ந்து மாழ்கி. 93

'ஆரியர் என்றன் ஆவி அரும்பொருள் அன்புத் தெய்வம்
சீரிய தந்தை யாரைத் தீர்கலேன் ; சிறந்த தொண்டு
நாருற இயற்ற வல்லேன் ; நாடினேன்,' என்று நாட்டுள்
ஏர்பெறு மாறு சென்றார் ; அன்பினுக் கெல்லை உண்டோ?

வாடின மலரி னின்று வான்மணம் மறைவ தேபோல்
வீடின வில்லி யார்தம் வியனுயிர் ஆகும் பொன்னார்
ஓடின கண்ணீர் வீழ்முன் உருமெறிந் தென்ன வீழ்ந்து
கூடினர் தலைவ ரோடும் குறைவில்லை குந்தத் தம்மா ! 95

வாழிய குருகை வேந்தன் மனக்கிடை வளர்த்த சீயர் !
வாழிய வைண வத்தின் வளர்ப்பிடம் ஆய பொன்னி !
வாழிய உறங்கா வில்லி தாசர்சீர் மலர்ந்த தொண்டு !
வாழிய பொன்னி யார்சீர் ! வளர்த்தவான் கற்பு வாழ்க !'

எம்பெருமானார் திருவடிகளே சரணம்.

---

93. கூருமம் - ஆமை, உளதனையும் - இருக்குமளவும், நிலை கெடும் - அழிகின்ற, அயர்ந்து - தளர்ந்து, மாழ்கி - புலம்பி.

94. சீரிய - சிறந்த, தீர்கலேன் - பிரியேன், நார் உற - அன்பு மிக, நாட்டுள் - பரம பதத்துள், ஏர் - பெருமை, எல்லை - முடிவு.

95. வான் மணம் - உயர்ந்த வாசனை, வீடின - உயிர் விட்ட, வியன் உயிர் ஆகும் - சிறந்த உயிராகிய, பொன்னார் - பொன்னாச்சியார், உருமு - இடி, எறிந்தென்ன - தாக்கியது போல.

96. வாழிய-வாழ்க, குருகை வேந்தன் - நம்மாழ்வாரின், மனக்கிடை - உட்கருத்தை, சீயர் - உடையவர், பொன்னி - காவிரி, சீர் மலர்ந்த - மேன்மை விளங்கிய, வாழிய பொன்னியார் சீர் - பொன்னாச்சியார் சீர் வாழ்க, வளர்த்த வான் கற்பு வாழ்க - அவர் வளர்த்த உயர்ந்த கற்பு வாழ்க.

# செய்யுள் முதற்குறிப்பு அகராதி

(எண்—பக்க எண்)

※


| | | | |
|---|---|---|---|
| அத்தரருள் | 22 | எம்பிரான் | 27 |
| அந்தோ ! இங் | 23 | எவ்வுயிரும் | 23 |
| அம்மொழி | 27 | என்குலத் | 4 |
| அவளழுகும் | 14 | என்பன | 28 |
| அவ்வொருவன் | 14 | என்றிடலும் | 12 |
| அறம்மெலியும் | 2 | என்று கரு | 19 |
| அன்பர்பணி | 21 | என்னப்புகல | 19 |
| அன்றுசில் | 27 | என்னேஉல | 10 |
| அன்னமாநகர் | 3 | ஏதுபதி | 11 |
| அன்னை தனை | 1 | ஒருபுறத்துப் | 23 |
| அன்னையே | 25 | ஒருவரின் ஒரு | 11 |
| ஆங்கொருநாள் | 18 | கண்ணப்ப | 5 |
| ஆண்டருள் | 26 | கதிர்மதிகள் | 1 |
| ஆமதுவும் | 13 | கமைவேண்டும் | 28 |
| ஆயின்மிக | 12 | கற்றபோ | 27 |
| ஆரியர் | 29 | கனிந்துசிவந் | 27 |
| ஆழ்வானும் | 18 | காலைக்கதிர்வெங் | 4 |
| ஆற்றலில் | 10 | காற்றினும் | 8 |
| ஆற்றல் | 3 | காற்றின்விரைந் | 24 |
| இப்பியில் | 5 | கீழைப் | 19 |
| இப்பெருங் | 10 | கூரத்தாழ் | 18 |
| இருமை | xxiii | கொத்தைப்படு | 7 |
| இருவீரும் | 15 | சங்கொருகை | 15 |
| இருளின் | 6 | சற்றுநீ | 24 |
| இவருடலைத் | 28 | சாரும்வரை | 13 |
| இவ்வணம் | 25 | சித்திரையுற் | 16 |
| இவ்விந்தைஇ | 9 | சீதம் உந்த | 16 |
| இவ்விழிகள் | 13 | சீர்மாறிப் | 17 |
| இன்னபல | 11 | சுரமாதரும் | 6 |
| இன்னவாறவ் | 5 | செம்பஞ்சுத் | 12 |
| உறவுகலந் | 16 | செய்வன | 28 |

## செய்யுள் முதற்குறிப்பு அகராதி


| | | | |
|---|---|---|---|
| சேர்தல்அறை | 11 | பல்லார்தம் | 20 |
| தண்குருகை | 2 | பாகவதர்க் | 21 |
| தந்தை செய் | xxiv | பிஞ்சிலே | 18 |
| தம்முயிர்க்கு | 23 | பொன்னியார் | 24 |
| தலைவனை | 24 | பொன்னே ! | 9 |
| தனியே பொரு | 7 | மணிம விந்திடு | 2 |
| தன்னுடைத் | 25 | மல்லுடைய | 11 |
| திருவிலாச் | 26 | மழையனையான் | 14 |
| தீயெலாம் | 26 | மன்னு | xxiii |
| தூய | 20 | மூவரில் | 4 |
| தேசுபடு | 14 | ராமாநுசர் | 8 |
| தொண்டக் | 18 | வந்த | xxiii |
| தொண்டர் | 22 | வந்தவர் | 24 |
| தொண்டே | 8 | வாடின | 19 |
| நம்மடத்துப் | 21 | வாராதே | 15 |
| நாடி நன்ற | 15 | வாழிய | 29 |
| நாளை | 20 | விதித்த சீர் | 26 |
| நாற்குலத்து | 12 | வியப்பில்லை | 13 |
| நிறம்பல | 1 | வில்லுடை | 4 |
| நீரிடை | 29 | வெங்கரி | 4 |
| நெய்க்குடத்தில் | 14 | வேதம் தமிழ் | 17 |
| பத்தர் | 20 | | |


THE LIBERTY PRESS, G. T., MADRAS.